Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 175 | வெள்ளிக்கிழமை 20 மே 2022 | வைகாசி 06 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50

## உர மூடை 10,000 ரூபா

கொழும்பு, மே 20
இரசாயன உர மூடை ஒன்று விவசாயிகளுக்கு 10 ஆயிரம் ரூபா வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உரப் 15 ➤

# இலங்கையில் விரைவில் பெரும் உணவுப் பஞ்சம்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை இணைந்து செயற்பட வேண்டுமென வலியுறுத்து



**கொழும்பு, மே 20**

**இலங்கையில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்படவுள்ளது. இந்தச் சவாலை வெற்றிகொள்ள நாம் ஒன்றிணைய வேண்டும். எனவே, வெற்றுக்காணிகளில் பயிரிடும் நடவடிக்கை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். இதற்கான திட்டங்கள் வெகுவிரைவில் வகுக்கப்படும் என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** 15 ➤

## கோதுமை மா, பாண் விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, மே 20
கோதுமை மாவின் விலை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று பிரீமா நிறுவனம் நேற்று அறிவித்தது.
அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 40 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 15 ➤

## புதிய அமைச்சர்களுக்கு சம்பளம் 'கட்'!

### ரணில் போட்ட குண்டு

கொழும்பு, மே 20
நாட்டில் தற்போது நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதால், புதிய அமைச்சரவையில் அமைச் 12 ➤

## புலிகள் அமைப்பிலிருந்து மரணித்த இளைஞர்களையும் அஞ்சலிப்போம்!

### ஆளும் கட்சி எம்.பி. டிலானுக்கு திடீர் ஞானோதயம்

கொழும்பு, மே 20
போரில் உயிரிழந்த படையினரை நினைவுகூரும் அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் 15 ➤

## திடீரென தீப்பற்றிய மோ.சைக்கிள்

யாழ்ப்பாணம், மே 20
வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று 15 ➤

### வீட்டில் இருந்த தம்பதியரை

## கொடூரமாகத் தாக்கி கொள்ளை முயற்சி!

### புளியம்பொக்கணையில் நள்ளிரவு சம்பவம்

கிளிநொச்சி, மே 20
கிளிநொச்சி, புளியம்பொக்கணையில் வீட்டிலிருந்த 15 ➤



## வடக்கு மாகாணத்தில் நான்காவது டோஸ்

யாழ்ப்பாணம், மே 20
வடக்கு மாகாணத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 20 வயதுக்கும் மேற்பட்ட நோய் எதிர்ப்புப் 15 ➤

### எரிபொருள் நெருக்கடி தீவிரம்

## அத்தியாவசிய சேவை ஊழியர்களே இன்று கடமைக்கு சமுகமளிப்பு!

### ஏனையோர் பணிக்குச் செல்லத் தேவையில்லை

கொழும்பு, மே 20
அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோரைத் தவிர ஏனைய அரச ஊழியர்கள் இன்று கடமைக்கு 12 ➤

## மண்ணெண்ணெய்க்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது மண்ணெண்ணெய் பற்றாக்குறை காணப்படுகின்றது 12 ➤

## கோப்பாயில் தொடர் கொள்ளை நேற்றும் 7 பேரிடம் கைவரிசை!

யாழ்ப்பாணம், மே 20
கோப்பாய் பகுதியில் அதிகாலை வேளையில் தொடர் வழிப்பறிக் கொள்ளைகள் நடைபெறுகின்றன என்றும், 12 ➤



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியைக் கலைப்பதற்காக பொலிஸாரால் நீர்த்தாரைப் பிரயோகம், கண்ணீர் புகைக் குண்டு வீச்சு நடத்தப்பட்டது. ஒரு கட்டத்தில் நீர்த்தாரைப் பிரயோக வாகனங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. (அ-எ-இ)

## பாடசாலைகளுக்கு இன்று முதல் "லீவு"

பக்.12

## வரணியில் விபத்து இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணம், மே 20
வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோர மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள் 12 ➤

## 'சதிகார அரசாங்கத்தை விரட்டுவோம்' கொழும்பில் திரண்ட மாணவர்கள்

### பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு, நீர்த்தாரைப் பிரயோகம்



கொழும்பு, மே 20
அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் கொழும்பில் போராட்டத்தை 15 ➤

## பதவிப் பேராசையாலேயே மஹிந்தவுக்கு இந்தக் கதி!

### நாடாளுமன்றில் தம்பியைச் சாடிய அண்ணன் சமல்

கொழும்பு, மே 20
மஹிந்த ராஜபக்ச தனது இரண்டு பதவிக்காலம் முடிந்ததும் ஓய்வு பெற்றிருக்க வேண்டும். அப்படிச்செய்திருந் 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தது திட்டமிட்ட இனப்படுகொலையே!

## கனேடிய நாடாளுமன்றம் ஏகமனது; கரவொலி ஏற்றும் வரவேற்பு

**ஒட்டாவா, மே 20**
**2009ஆம் ஆண்டு இறுதிப்போரின்போது தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று ஏகமனதாக ஏற்றுத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது கனேடிய நாடாளுமன்றம்.**

இதன்மூலம் இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலையை ஏற்று அங்கீகரித்த உலகின் முதல் நாடாளுமன்றமாகக் கனேடிய நாடாளுமன்றம் அமைந்துள்ளது. கனேடிய நாடாளுமன்றத்தின் நேற்றுமுன்தின அமர்வில் இது தொடர்பான பிரேரணையை கனேடிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி முன்வைத்தார். அவரின் பிரேரணை எதிர்ப்பு இல்லாமல் அனைத்துக் கட்சிகளாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதையடுத்து இலங்கையில் 2009ஆம் ஆண்டு தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று முற்றுமுழுதுமாக ஏற்றுக்கொண்டது கனடா. இந்தத் தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டமைக்கு அனைவரும் கரவொலி எழுப்பி வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். அத்துடன் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 18ஆம் திகதியை தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் நாள் என்றும் கனேடிய நாடாளுமன்றம் அறிவித்தது. (ம)

## சான்றிதழ்கள் வழங்குவதில் சிக்கல்

கொழும்பு,மே 20
பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களை வழங்குவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது என்று பதிவாளர் நாயக திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆவணங்களை வழங்கப் பயன்படுத்தப்பட்ட லங்கா அரசாங்க வலையமைப்பு தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயலிழந்துள்ளது.
இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் இதனைச் சரிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. கணினி செயலிழப்புக் காரணமாகச் சான்றிதழ்களை வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது என்று பதிவாளர் நாயக திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-இ)

## பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அர்த்தமுடன் பொறுப்புக்கூறுக

### கனேடியப் பிரதமர் வலியுறுத்து

ஒட்டாவா, மே 20
இலங்கையில் இடம்பெற்ற போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கும் அனைத்துத் தரப்பினருக்கும் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகின்றோம் என்று தெரிவித்தார் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ருடோ.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகள் நிறைவடைவடைந்துள்ள இவ்வேளையில், முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட 26 வருடகால ஆயுதப்போரில் கொல்லப்பட்ட அனைவரையும் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றேன். அத்துடன் போரில் காணாமற் போனவர்கள், காயமடைந்தவர்கள், போரால் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இந்தச் சோகத்தின் வலி, அதிர்ச்சி மற்றும் இழப்புடன் தொடர்ந்து வாழும் குடும்பங்களுடன் எங்கள் பிரார்த்தனைகள் உள்ளன என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.



தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியால் இலங்கையில் மக்கள் தொடர்ந்து துன்பப்படுவது குறித்து எங்களது கவலையை வெளிப்படுத்துகிறோம்.
அமைதியான முறையில் போராட்டங்கள் மூலம் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான மக்களின் உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரம் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். தமிழ்மக்கள் உட்பட அனைத்து இலங்கை மக்களும் பாதுகாப்பான, அமைதியான மற்றும் நிலைபேறான நாட்டில் வாழத் தகுதியானவர்கள். தமிழ் சமூகம் மற்றும் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட ஏனையோரின் அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு நிலையான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் அடைய வேண்டியதன் அவசியத்தை நான் தொடர்ந்து வலியுறுத்துகிறேன்.
போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிர் பிழைத்தவர்களுக்கும் நீதி வழங்கும் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் செயல்முறையை தொடங்குவதற்கான செயற்பாடுகளை நிறைவேற்றுமாறு இலங்கைக்குக் கனடா தொடர்ந்து அழைப்பு விடுக்கிறது - என்றுள்ளது. (ம)

## தமிழினப் படுகொலையை ஏற்றமை வரலாற்றின் முக்கியமான நிகழ்வு!

### ஹரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு

ஒட்டாவா, மே 20
தமிழ் இனப்படுகொலையை கனடா ஏற்று அங்கீகரித்தமை தமிழர் வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வு என்று தெரிவித்தார் ஹரி ஆனந்தசங்கரி.
தனது தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கனடாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு இது மிகவும் முக்கிய நாள். கனேடிய நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை தமிழ்மக்களின் இனப்படுகொலையை அங்கீகரிப்பதுடன், மே18ஆம் திகதியை தமிழர் இனப்படுகொலை நினைவு தினமாகவும் அங்கீகரித்துள்ளது. உலகில் நாடாளுமன்றம் ஒன்று இலங்கையில் தமிழர் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று ஏற்று அங்கீகரிப்பது இதுவே முதல் தடவை. ஆனால் இத்துடன், நாங்கள் நின்றுவிடக் கூடாது. உண்மையில், பொறுப்புக்கூறலை நோக்கிய பயணம் மிக நீண்டது. இனப்படுகொலைக்குக் காரணமானவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டியதை உறுதிசெய்ய நாங்கள் இன்னும் இரட்டிப்பு வேகத்தில் உழைக்கவேண்டும் - என்றார். (ம)

## மே 9 வன்முறைத் தாக்குதலில் காயமடைந்தவர் உயிரிழப்பு

கொழும்பு,மே 20
கடந்த 9 ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகை வளாகத்தில் இடம்பெற்ற வன்முறைகளின் போது கடுமையாகத் தாக்கப்பட்டவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
பெரஹெர மாவத்தை பிஷொப் கல்லூரி கேட்போர் கூட வளாகத்தின் நடைபாதையில் காயமடைந்து விழுந்த கிடந்தவர், ஊடகவியலாளர்கள் சிலரால் ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சை பெற்று வந்தவர் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் குளியாப்பிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தலை மற்றும் மார்புப்பகுதியில் ஏற்பட்ட ஆழமான காயமே இவரது உயிரிழப்புக்குக் காரணம் என்று தெரிய வந்துள்ளது. அவரைத் தாக்கியவர்கள் தொடர்பான விசாரணைகளைக் கொள்ளுபிட்டிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

## எரிபொருள் நிலையம் முற்றுகை; பாதுகாப்புப் படையினர் குவிப்பு

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தைப் பொதுமக்கள் நேற்று முற்றுகையிட்டமையால், அவ்விடத்தில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. இதனால் அங்கு பாதுகாப்புப் படையினர் வரழைக்கப்பட்டனர். எரிபொருள் நிலையத்தில் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் எரிபொருள் சேமிப்பில் வைக்கப்பட்டுள்ளது. எனினும் 20 லீற்றர் பெற்றோல் பரலில் நிறைக்கப்பட்டு தனியார் ஒருவருக்கு வழங்கப்பட்டது. இதனை அவதானித்த பொதுமக்கள் தமக்கும் எரிபொருள் வழங்குமாறு தெரிவித்தனர். எனினும் அத்தியாவசிய தேவைக்காக சேமிப்பிலுள்ள எரிபொருளை வழங்கமுடியாது என்று ஊழியர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இதன் போது எரிபொருள் நிலைய ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பொலிஸார், இராணுவத்தினர் , விசேட அதிரடிப்படையினர் வருகை தந்தனர்.
பொதுமக்களிடம் கலந்துரையாடிய படையினர் தனியாருக்கு வழங்கிய 20 லீற்றர் பெற்றோலைக் கையகப்படுத்தியதுடன் அதனை எரிபொருள் சேமிப்பு தாங்கிக்குள் மீளச் செலுத்தினர். அதன் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
குறித்த எரிபொருள் நிலையத்தில் 15 இராணுவத்தினர் , 10 பொலிஸார் 2 விசேட அதிரடிப்படையினர் தொடர்ந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இந்தியாவிடம்

# நீண்டகால குத்தகைக்கு கச்சதீவை விட முயற்சி

### திரைமறைவில் பல திட்டங்கள் மன்னார் மீனவர்கள் குற்றச்சாட்டு

**மன்னார், மே 20**

**கச்சதீவு கடற்பிராந்தியத்தை நீண்டகால அடிப்படையில் இந்தியாவுக்குக் குத்தகைக்குக் கொடுப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என்று மன்னார் மீனவ சமூகத்தினர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.**

மன்னார் தேசிய மீனவர் ஒத்துழைப்புச் சங்கத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் ஆலம் தெரிவித்ததாவது:

கச்சதீவு பகுதி இந்தியாவுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட இருப்பதாக ஊடகங்கள் வாயிலாகவும் பரவலாக மன்னார் மாவட்ட மீனவர்கள் மூலமாகவும் அறியக்கூடியதாக இருக்கிறது. இதனுடைய உண்மைத் தன்மையானது மீனவர் கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களாக செயற்படும் எங்களுக்கே இன்னும் தெரியாது.



ஆனால், இந்திய மீனவர்களின் நன்மைகருதி கச்சதீவை இந்தியா குத்தகைக்கேனும் பொறுப்பேற்க வேண்டும் என்று தமிழகத்தில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்படும் வலியுறுத்தல்கள் எம்மைக் கலக்கமடைய வைக்கின்றன.

கச்சதீவு தொடர்பான முழு அதிகாரமும் உரிமையும் இலங்கைக்கு இருக்கின்றபோதே இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புக்களைத் தடுக்கமுடியவில்லை. இப்படியிருக்கையில் கச்சதீவு தொடர்பான உரிமைகளை இந்தியாவுக்குக் கொடுத்துவிட்டால் நிலைமை என்னவாகும்?

எனவே இப்போது பொறுப்பேற்று இருக்கின்ற பிரதமரும் அவரோடு இணைந்து செயற்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் கச்சதீவைப் பாதுகாக்கவேண்டும். வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை, இலங்கையின் பொருளாதாரத்தை, நாட்டின் இறைமையைக் காப்பாற்ற வேண்டும்-என்றார். (ம-213)

## இருவேறு விபத்துகளில் நான்கு இளைஞர்கள் சாவு

யாழ்ப்பாணம், மே 20

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இருவேறு விபத்துகளில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

திருநெல்வேலி, பூங்கனிச்சோலைக்கு அருகில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில் 3 இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். கோப்பாய், பூதர்மடத்தடியைச் சேர்ந்த மகேந்திரன் மகிந்தன் (வயது-25), கச்சேரி கிழக்கைச் சேர்ந்த றொபின்சன் சார்ள்ஸ் (வயது-23) மற்றும் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த யோகநாதன் மேர்வின் டேனுஜன் (வயது-17) ஆகிய மூவருமே உயிரிழந்துள்ளனர்.

ஒரு மோட்டார் சைக்கிளில் இருவரும் மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் மூவரும் பயணித்தவேளை பூங்கனிச்சோலைக்கு அருகில் இரு மோட்டார் சைக்கிள்களும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில், இருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர். மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், அவர்களின் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். ஏனைய இருவரும் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உரும்பிராய் பகுதியில் இடம்பெற்ற இன்னொரு விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கோப்பாய் தெற்கைச் சேர்ந்த துரைராசா மயூரன் (வயது-27) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகே இருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த விபத்துக்கள் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-26,20)

***ஆசிரியர் குறிப்பு : இந்தச் செய்தி உதயனின் நேற்றைய பதிப்பில் முன்பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது. தொழில் நுட்பத் தவறு காரணமாக தொடர்ச்சி பிரசுரமாகவில்லை.***

## வீட்டிலிருந்து வேலை செய்தால்

# சம்பளம் அரைவாசியாக குறைக்கப்படவேண்டும்

*அரச சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவிப்பு*

கொழும்பு, மே 20

அரச ஊழியர்களை பணிக்கு அழைப்பதை மட்டுப்படுத்த வேண்டுமாயின், வீடுகளில் இருந்து கடமையாற்றும் ஊழியர்களின் சம்பளம் அரைவாசியாக குறைக்கப்படவேண்டும் என்று அரச சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்களைப் பணிக்கு அழைப்பதை மட்டுப்படுத்துமாறு சில தரப்பினர் யோசனை முன்வைப்பார்களாயின், சம்பளத்தைக் குறைப்பதற்கும் இணக்கம் தெரிவிக்கவேண்டும் என்று அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள எரிபொருள் உள்ளிட்ட வளங்களின் தட்டுப்பாட்டால் அரச செலவினங்களைக் குறைப்பதைக் கருத்திற்கொண்டு, அரச ஊழியர்களை அலுவலகத்துக்குப் பணிக்கு அழைப்பதை வரையறைக்கு உட்படுத்துமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கே.டீ. எஸ். ருவன் சந்திரவால் அமைச்சின் செயலாளருக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கமையவே வீடுகளில் இருந்து கடமையாற்றும் ஊழியர்களின் சம்பளத்தை அரைவாசியாகக் குறைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கவேண்டும் என்று அரச சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ஒ-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்டைக்கு அரசாங்க உத்தியோகத்தர்மாருக்கு ஒரு சத்திய சோதனையான நாள் கண்டியளோ. 'அத்தியாவசியசேவை செய்யிற ஆக்களைத் தவிர மற்ற ஆக்கள் இன்டைக்கு ஒப்பீஸூக்கு போகத் தேவையில்லை' எண்டு அரசாங்கம் அறிவிச்சிருக்கு. அதின்படி இன்டைக்கு ஒப்பீஸூக்கு போறவைதான் அத்தியாவசியமான ஆளணி எண்டும், மிச்சப்பேரெல்லாம் தேவையே இல்லாத ஆணியள் எண்டும் உறுதியாகிடுமெல்லோ. அதால 'வீட்டில நிக்கிறதுக்கு எப்ப லீவு கிடைக்கும் ?'எண்டு கலண்டரை வைச்சுக் கணக்குப் பாக்கிறவை கூட, பெற்றோல் இல்லாட்டியும் நடந்தாவது ஒப்பீஸூக்கு போவமெண்டு ஒற்றைக்காலில் நிக்கப்போயினம். இல்லாட்டி' அப்ப அவசியமே இல்லாத ஒரு வேலைக்குத்தான் இவ்வளவு எடுப்புத் தொடுப்பா போய் வந்தனியளோ?' எண்டு வீட்டுக்காரர் கேட்டிடுவினமெல்லோ.**

**வீட்டுக்காரருக்குத்தான் இந்த அத்தியாவசியமோ, இல்லையோ எண்டு தெரியேலை எண்டு பார்த்தால் அரசாங்கத்துக்கும் தெரியேலைபோல. பார்லிமெண்டில பிரதமரும்சரி, பிறகு பொதுநிர்வாக அமைச்சின்ர செயலாளர் விட்ட சுற்றறிக்கையிலையும் சரி, மொட்டையா 'அத்தியாவசிய சேவை செய்யிற ஆக்களைத் தவிர மற்றவை வேலைக்குப் போகத்தேவையில்லை' எண்டுதான் சொல்லுப்பட்டிருக்கு. அதிலகூட ஆரெல்லாம் அத்தியாவசிய சேவைக்குள்ள வருகினம், ஆர்வரேலை எண்ட விளக்கம் இல்லை. ஏற்கனவே தாபனவிதிக்கோவையில இதைப்பற்றி சொல்லியிருக்குத்தான். ஆனாலும், அதில சொல்லுப்படாத சில டிப்பார்ட்மெண்டுகள்கூட இப்பத்தைக் காலத்தில அவசியமான பணிக்குள்ள வருவினம். அதோட அத்தியாவசியத்துறைக்குள்ள இருக்கிற எல்லாரும் அவசியமான பணியாளர் எண்டும் இல்லை. அதால அதைப்பற்றி தெளிவாச் சொல்லாமல், போக்கடிபோக்கா ஒரு ஓர்டரைப் போட்டதால நேற்று அரச உத்தியோகத்தர்மாரெல்லாம் 'நான் அத்தியாவசிய உத்தியோகத்தரோ? இல்லையோ?' எண்டு தங்களுக்குள்ளே தாங்கள் பட்டிமன்றம் வைச்சதுதான் மிச்சம்.**

**அதோட அடிப்படைச்சம்பளம் இல்லாட்டி அரைவாசிச் சம்பளத்தைக் குடுத்து இப்பிடி அவசியமில்லாத பணியாளர்மாரை வீட்ட இருந்து வேலை செய்யச் சொல்லுற திட்டமும் அரசாங்கத்திட்ட இருக்கு. அப்பிடி அரைவாசிச் சம்பளத்தோட வீட்ட நிக்க ஒருத்தரும் விரும்பமாட்டினம். அதால இப்பிடி ஒருநாள் பரிசோதனையா அவசியமான ஆக்கள் மட்டும் வாங்கோ எண்டேக்க, ஆரெல்லாம் வராமல் விடுகினமோ அவை தாங்களாகவே அவசியமில்லாத உத்தியோகத்தர் எண்டதை ஒப்புக்கொண்ட மாதிரி போடுமெல்லோ. அதைவைச்சு அவையை அரைச்சம்பளத்தோட வீட்டை நிக்கவைச்சு வேலைவாங்கத்தான் இப்பிடி ஒரு தூண்டிலை அரசாங்கம் போட்டிச்சோ தெரியேலை. ரணிலுக்கு நரி மூளையெண்டது எல்லாருக்கும் தெரியும்தானே. பார்த்து சூதானமா நடவுங்கோ.**



- பட்சி



## சாவகச்சேரியில் மருத்துவமனையில், வாகனங்கள் நிறுத்த கொட்டகை அமைத்துத் தருமாறு கோரிக்கை

சாவகச்சேரி, மே 20

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வாகனங்கள் நிறுத்துவதற்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் தற்காலிகக் கொட்டகை அமைத்துத் தருமாறு மருத்துவமனை நிர்வாகத்திடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மருத்துவமனையில் இயங்கிவந்த வாகனப் பாதுகாப்பு நிலையத்தை குத்தகைக்கு எடுக்க எவரும் முன்வராததால் மருத்துவமனைக்கு வருவோர் மருத்துவமனைக்கு வெளியில் உள்ள இடத்தில் வாகனங்களை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டது.

தற்போது நாட்டில் நிலவும், பெற்றோல் தட்டுப்பாட்டால் மோட்டார் சைக்கிள்களை வெயிலில் விட்டுச் செல்வதால் எரிபொருள் ஆவியாக காய்ந்து போகும் நிலை காணப்படுகிறது. இது தொடர்பாக மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தில் முறையிட்டும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை, எனவே உடனடியாக வாகனங்களை நிறுத்த தற்போது அனுமதிக்கப்பட்ட இடத்தில் தற்காலிக கொட்டகை அமைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் முன்னைய காலங்களில் மருத்துவமனை வளாகத்தினுள் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் நிறுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனால் வளாகத்திலுள்ள பாதுகாப்புக் கொட்டகை மற்றும் மரநிழலில் தமது வாகனங்களை நிறுத்தக் கூடியதாக இருந்தது எனவும் அண்மைக்காலமாக வளாகத்தினுள் வாகனங்கள் கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டு மருத்துவமனைக்கு முன்பாக உள்ள வெளியில் நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டது என்றும் மக்கள் தெரிவித்தனர். (ஒ-14-9)

# வயல் உழுவதற்கு எரிபொருள்களில்லை சிறுபோகத்தைக் கைவிட்ட விவசாயிகள்

**மன்னார், மே 20**

**மன்னார் மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், வயல்களை உழுவதற்கு எரிபொருள் இன்மையால், 90 வீதமான விவசாயிகள் நெற்செய்கை மேற்கொள்ள முடியாதுள்ளனர் என்று மன்னார் கட்டுக்கரைக்குளம் விவசாயிகள் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் எம்.எஸ்.சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டு சிறுபோகச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் சுமார் மூவாயிரம் விவசாயிகளே நெற்செய்கையை ஆரம்பித்துள்ளனர். கட்டுக்கரைக்குளத்தில் இருக்கும் நீரின் அளவைக் கொண்டு வருடந்தோறும் சிறுபோகம் மேற்கொள்ளப்படும்.

இந்த வருடமும் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் மூவாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கட்டுக்கரைக்குளத்திலிருந்து நீர் விநியோகமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் நிலத்தை உழுவதற்கு, எரிபொருள் இன்மையால் 90 வீதமான விவசாயிகள் நெற்செய்கையை தொடர முடியாதுள்ளனர்.

சிறுபோக நெற்செய்கை காலம் தாழ்த்தப்படுமானால், மழை அல்லது நீர் இன்மையால் வயல்கள் பாதிப்படையும் அபாயமும் ஏற்படும் -என்றார். (க-60)

## தும்பளையில் நகை திருட்டு

யாழ்ப்பாணம், மே 20

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பளை தபால் பெட்டிச் சந்தியில் உள்ள வீடொன்றில் 4 பவுண் நகை திருடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டுக்குள் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியளவில் புகுந்த குழுவொன்று 4 பவுண் நகையைத் திருடிச் சென்றுள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய திருட்டுத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14-125)



## கர்ப்பிணிகள், குழந்தைகளுக்கு மாதந்தோறும் போசாக்கு மா

சாவகச்சேரி, மே 20

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தால் பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு புலம்பெயர் உறவுகளின் பங்களிப்புடன் மாதந்தோறும் போசாக்கு மா வழங்கப்படவுள்ளது.

அதற்கான ஆரம்ப நிகழ்வு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கழகத்தின் ஐக்கிய இராச்சியக் கிளையின் தலைவர் மருத்துவர் புவிநாதன் விருந்தினராகக் கலந்துகொண்டு இந்த மாதத்துக்கான போசாக்கு மாவை வழங்கினார். (ஒ-14-9)

## திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 20

யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசை நிகழ்வும்' என்ற தொடரின் ஆறாவது குருபூசையாக "திருஞானசம்பந்தர் நாயனார் குருபூசை" நிகழ்வு கோண்டாவில் கைலாசநாதர் வேதசிவாகம அறநெறிப் பாடசாலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

குருபூசை மற்றும் தலைமையுரைகளைத் தொடர்ந்து "ஞானக்குழந்தை" என்ற கருப்பொருளில் இளம் சைவப்புலவர் ச.நவநீதன் சிறப்புச்சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அத்துடன் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்களும் குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்துசமயப் பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இந்து கலாசார உத்தியோகத்தர் நகுலா ரபேந்திரராசா தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வாழ்நாள் பேராசிரியர் முனைவர் அ.சண்முகதாஸ், ஜப்பான் ககுசுஜின் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-14)



## 275 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், மே 20

யாழ். மாவட்டத்தில் விழிப்புலனற்றோர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 275 குடும்பங்களுக்கு 3 லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

பூமணியம்மா அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கனடா மெட்ரோ லான்ட் மீடியா எம்பிளோயஸ், கனகரத்தினம் கோபால் அன் கம்பனி ஆகியவற்றின் நிதி அனுசரணையில் பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான தலைவர் லயன்கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் இந்த உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ஒ-14)

## வீதியால் சென்ற பெண்களை தாக்கிய இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 20

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான் பகுதியில் நேற்றுமுன்தினம் வாகனங்களில் சென்ற பெண்களை வழிமறித்துத் தாக்கிய இருவரை இளவாலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இளவாலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான் சந்தியில் மதுபோதையில் நின்ற இருவர், வீதியால் வாகனத்தில் சென்ற பெண்களை மறித்து தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து குறித்த பெண்கள் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அங்கு இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

காயமடைந்த பெண்கள் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சு-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டென்மார்க் தலைநகரில் முள்ளிவாய்க்கால் பேரணி

கொழும்பு,மே 20

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் பேரணி டென்மார்க் நாடாளுமன்றுக்கு முன்பாக நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

பேரணியில் கலந்துகொண்டோர் இனவழிப்புக்கான நீதி கோரிய பதாகைகள், தமிழீழத் தேசியக்கொடி ஆகியவற்றை ஏந்தியிருந்தனர். அங்கு முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் உயிர்நீத்தவர்களுக்கான நினைவுத்தூபிக்கு ஈகச்சுடரேற்றி, அகவணக்கம் மற்றும் மலர்வணக்கம் செலுத்தப்பட்டது. பேரணியின் இறுதியில் "தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்" என்று கோஷம் உரக்க ஒலித்ததுடன், "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடலுடன் நிகழ்வு நிறைவடைந்தது. இறுதியில் முள்ளிவாய்க்கால் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சியும் அனைவருக்கும் பரிமாறப்பட்டது. (க-இ)

# காலிமுகத்திடல் நினைவேந்தல் நல்லதொரு திருப்பம் தரட்டும்!

*சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, மே 20

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, காலிமுகத்திடலில் இடம்பெற்றுள்ளமையானது, இன ஐக்கியத்தின் சிறந்ததொரு ஆரம்பமாக இருக்கும் என நம்புகின்றேன். அதேபோல தேசிய இனப் பிரச்சினைக்கு கௌரவமானதொரு அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். அப்போது இந்நாடு மீளெழுச்சிபெறும் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

'போரில் உயிரிழந்த மக்களுக்கு முள்ளிவாய்க்காலிலும், வடக்கு - கிழக்கில் ஏனைய பகுதிகளிலும் நேற்று (நேற்றுமுன்தினம்) நினைவேந்தல் மிகவும் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இந்தமுறை விசேடமாக, காலிமுகத்திடலிலும் அந்த நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இதனை நல்லதொரு ஆரம்ப அறிகுறியாக நான் பார்க்கின்றேன். இளைஞர்கள் மத்தியில் மனமாற்றம் ஏற்பட்டுள்ளது. இது இன ஒற்றுமைக்கான சிறந்த ஆரம்பமாக அமையும் என நம்புகின்றேன்.

ஆட்சி முறைமை மாற்றம், அரசமைப்பு மாற்றம் பற்றியெல்லாம் தற்போது பேசப்படுகின்றது. எனவே, தேசிய இனப்பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட வேண்டும். அப்போதுதான் நாங்களும் இலங்கையர்கள் என்ற உணர்வு தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படும். நாட்டின் பொருளாதாரத்துக்கும் பங்களிப்பு வழங்குவார்கள். புலம்பெயர் தமிழர்களிடமிருந்து முதலீடுகள் வரும். அரசியல் தீர்வே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதாக அமையும்' - என்றார். (ம-44)

# முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றது திட்டமிடப்பட்ட தமிழின அழிப்பே!

## மீண்டும் மீண்டும் வலியுறுத்துவோம் உருத்திரகுமாரன் அழுத்தம்திருத்தம்

**நியூயோர்க், மே 20**

**இலங்கைத்தீவில் தமிழ்த் தேசிய இனத்தைக் கருவறுத்து, தமிழ் மக்களை உதிரிகளாக வலுவிழக்கச் செய்து, எமது தமிழீழத் தாயகத்தை முழுமையாகவும் முடிவாகவும் ஆக்கிரமித்து விடுவதற்கு சிங்கள - பௌத்த இனவாத சிறிலங்கா அரசு நடத்திய திட்டமிடப்பட்ட தமிழின அழிப்பே முள்ளிவாய்க்காலில் அரங்கேறியது. உலகுக்கு ஜனநாயகத்தையும் மனித நாகரிகத்தையும் போதிக்கும் மேற்குலக ஜனநாயக நாடுகளும் இந்தத் தமிழின அழிப்பில் பங்கெடுத்து தமது கைகளில் குருதிக்கறைகளைப் படியச் செய்துள்ளன. இவற்றை நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம் என்று தெரிவித்தார் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன்.**

முள்ளிவாய்க்கால்நினைவுதினத்தை முன்னிட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய நாள் இலங்கைத்தீவில் அரசாக நிறுவனமயப்பட்டிருக்கும் சிங்கள இனவாதப்பூதம் தமிழீழ மக்கள்மீது நடத்திய தமிழின அழிப்பின் கொடுமைகளை நாம் உலகெங்கும் உரத்துச் சொல்லும் நாள்.

இற்றைக்கு 13 ஆண்டுகளுக்கு முன்னர் 2009 ஆம் ஆண்டு தமிழீழத் தாயகத்தின் வன்னிநிலப்பரப்பெங்கும் சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படையினாரால் பெரும் தமிழினவழிப்பு திட்டமிட்டு நடத்தப்பட்டது. இந்தத் தமிழினவழிப்பு 2009ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் உச்சம் கண்டது. மே 18 ஆம் நாள் தமிழ் மக்களின் குருதிவாடை காற்றுமண்டலமெங்கும் பரவி நிரம்பியிருக்க சிங்கள - பௌத்த பேரினவாதம் தமிழீழத் தாயகத்தை முழுமையாக ஆக்கிரமித்தது.

இந்த இனவழிப்பு தமிழீழ மக்களுக்குத் தந்த துயர் எழுத்தில் வர்ணிக்க முடியாதது. வார்த்தைகளால் விவரிக்கமுடியாதது. இந்தத் துயரின் நினைவுகளைத் தலைமுறை தலைமுறையாகப் பேணிக் கொள்ளும் வகையில் தமிழீழத் தேசியத் துக்க நாள் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. 21ஆம் நூற்றாண்டின் மிகப்பெரும் இனவழிப்பாக அமைந்த தமிழினவழிப்பில் ஏறத்தாழ ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நாம் இந்தியாவையும் மேற்குலக ஜனநாயக நாடுகளையும் நட்பு சக்திகளாகக் கொண்டு தமிழின அழிப்புக்கு நீதி கோரும் போராட்டத்தை மேற்கொண்டு வருகிறோம். தாம் செய்த வரலாற்றுத் தவறுக்கு பிராயச்சித்தம் தேடுமாறு நாம் இந்த நாடுகளை இன்றைய நாளில் கோருகிறோம்.

எமது மக்களுக்கு எதிராக சிங்களத்தின் இனவழிப்பில் ஏதோவொரு வகையில் பங்கெடுத்தவர்கள் என்ற வகையில் எமது மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டிய தார்மீகக் கடப்பாடு இந்த நாடுகளுக்கு உள்ளது. இந்தக் கடப்பாட்டை காலதாமதமின்றி ஆற்றும்படி இன்றைய தமிழீழத் தேசியத் துக்க நாளில் நாம் இந்த நாடுகளைக் கோருகிறோம்.

முள்ளிவாய்க்கால் தமிழீழ இன அழிப்புக்கு நீதி கிடைக்கும் வரை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் நீதிக்கான தமது போராட்டத்தை நடத்திக் கொண்டுதான் இருப்பார்கள். இந்தப் போராட்டம் நீதி கிடைக்கும்வரை தொடரும். முள்ளி வாய்க்கால் தமிழினவழிப்பின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாக நிலைத்திருக்கும் - என்றார். (ம)





# தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,மே 20

தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தலைமையில், ஈகச்சுடர் ஏற்றி மலர் தூவி, அக வணக்கத்துடன் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் பிரதேசசபையின் உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-27)

# முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு பேசாலையில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

மன்னார்மே 20

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மன்னார் பேசாலை முச்சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

முள்ளிவாய்க்காலில் மறைந்தவர்களை நினைந்து மலர்தூவி, மெழுகுவர்த்தி ஏற்றி இறந்தவர்களின் ஆன்மாவுக்காகப் பிரார்த்தனை செய்யப்பட்டது.

பேசாலை புனித வெற்றி அன்னையின் ஆலயப் பேரவை, பேசாலை மீனவசங்கம் உட்பட பேசாலை மக்கள் நிகழ்வை ஏற்பாடு செய்தனர். நிகழ்வின் இறுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பகிரப்பட்டது. (க-60)

# கூட்டமைப்பினரால் தீவகத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்வு

யாழ்ப்பாணம்,மே 20

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவகக் கிளையினரால் தீவகத்தின் பல பகுதிகளில் கடந்த இரண்டு நாள்களாக பொதுமக்களுக்கு கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டது. (க-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வும் செயலமர்வும்

யாழ்ப்பாணம், மே 20

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான போதைப்பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வும், சிறார்களின் ஆளுமை விருத்தியும் மற்றும் புத்தாக்கமும் எனும் கருப்பொருளிலான செயலமர்வும் கோப்பாய் பிரதேச செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது செயலமர்வின் வளவாளராக லின்டா ரோஸ் (லண்டன்) கலந்துகொண்டார். சி.சி.ஏச். நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், முன்பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளர், யாழ்ப்பாண சி.சி.ஏச். நிறுவன நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஓ-14-27)



# சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் தமிழ் மாணவன்

யாழ்ப்பாணம், மே 20

63 ஆவது சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர் ஒருவர் தெரிவாகியுள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் நோர்வேயின் ஒஸ்லோ நகரத்தில் குறித்த போட்டி இடம்பெறவுள்ளது.

இதில் இலங்கை சார்பில் 6 மாணவர்கள் தெரிவாகியுள்ள நிலையில் அவர்களில் 5 சிங்கள மாணவர்களுடன் ஒரேயொரு தமிழ் மாணவன் தெரிவாகியுள்ளார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் திருக்குமரன் என்ற மாணவரே இவ்வாறு தெரிவாகியுள்ளார். குறித்த மாணவனுக்கான கௌரவிப்பு நிகழ்வு கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ச-214)

# தென்மராட்சி கிராமங்களுக்கு வறட்சிக் கால குடிதண்ணீர் விநியோகம்

சாவகச்சேரி, மே 20

தென்மராட்சியில் வறட்சியால் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் கிராமங்களுக்கு அடுத்த வாரம் முதல் இடர்கால முகாமைத்துவ அமைச்சின் ஏற்பாட்டில் வறட்சிகால குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின்கீழ் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

அதன்படி சரசாலை, மட்டுவில், வரணி, நாவற்குழி, தனன்களப்பு, மறவன்புலவு ஆகிய கிராமங்கள் மற்றும் அங்குள்ள பாடசாலைகளில் நீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டு குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் சாவகச்சேரி நகரசபை, பிரதேசசபை மற்றும் தேசிய நீர் வழங்கல் அதிகார சபை ஆகியவற்றின் ஊடாக 52 இடங்களில் தொட்டிகள் வைக்கப்பட்டு குடிதண்ணீர் வழங்கப்பட்டது.

எனினும் இந்த வருடம் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக மக்கள் தூர இடங்களுக்குச் சென்று குடிதண்ணீரைப் பெறுகின்றனர்.

இது குறித்த பிரதேச செயலகத்துக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து இடர்கால முகாமைத்துவ அமைச்சு, வறட்சி கால குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தின் கீழ் குடிதண்ணீரை வழங்க அனுமதி வழங்கியுள்ளது. (ச-9)




# மோ.சைக்கிள் நாயுடன் மோதி இருவர் காயம்

சாவகச்சேரி, மே 20

இருவேறு இடங்களில் மோட்டார் சைக்கிள் நாயுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் கைதடி மற்றும் முகமாலை ஆகிய இடங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்தில் நாவற்குழி கிழக்கைச் சேர்ந்த இ.மிதுராஜ் (வயது-37), இளவாலையைச் சேர்ந்த கே.எஸ். செல்டன் (வயது-27) என்பவர்களே காயமடைந்துள்ளனர். (ஓ-14-9)



# மரத்துடன் மோதி பேருந்து விபத்து இருவர் காயம்

பேருந்து ஒன்று பனை மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர். யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியில் மதவாச்சிக்கு அருகில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிவேகம் காரணமாக பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. காயமடைந்த இருவரும் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பூனாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-110)

## கிராமத்தில் உற்பத்தி செய்யும்

# போசாக்கு நிறைந்த உணவுகளை கர்ப்பிணிகள் உண்ண வேண்டும்

## சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

சாவகச்சேரி, மே 20

நாடு தற்போது எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் ஆரோக்கியமான, சுகதேகியான சமுதாயத்தை உருவாக்க கர்ப்பிணிகள் போசாக்கு நிறைந்த உணவுகளை அவசியம் உண்ணவேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சி.திதோகுமார் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தால் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு போசாக்கு மா வழங்கும் நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கர்ப்ப காலத்தில் ஆடம்பர உணவுப் பொருள்களை உண்பதை விட எமது நாட்டில் கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் போசாக்குள்ள உணவு வகைகளை அதிக அளவில் உண்ணவேண்டும்.

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டு வந்த திரிபோசா சத்துணவு மா கொரோனாக் காலம் தொடக்கம் தற்போது வரை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கர்ப்பிணிகள் சத்துள்ள உணவுப்பொருள்களை உண்ணவேண்டும். எமது கிராமத்தில் நிறைந்த போசாக்கு உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. அவற்றில் இன்னும் உணவுகளில் நிறைந்த போசாக்கு கிடைக்கிறது. எனவே கர்ப்ப காலத்தில் கர்ப்பிணிகள் போசாக்கு நிறைந்த உணவுகளை அதிக அளவில் உண்பதால் மட்டுமே ஆரோக்கியமான, சுகதேகியான சமுதாயத்தை உருவாக்கமுடியும்.

அத்துடன் எமது பிரதேசத்தில் உள்ள அன்னையர் கழகத்தினர், போசாக்கு தானிய உணவு வகைகளைக் கொள்வனவு செய்து சத்துமா தயாரித்து விநியோகம் செய்து வந்தனர்.

ஆனால், தற்போதைய நெருக்கடியில் பொருள்களின் விலை அதிகரிப்பால் மா தயாரிப்பதை நிறுத்திவிட்டனர். அவர்களால் மேற்கொள்ளப்பட்ட போசாக்கு மா உற்பத்தி திட்டத்தை புலம்பெயர் நாடுகள் செய்தால் மீண்டும் ஆரம்பிக்க முடியும் -என்றார். (ஓ-14-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பேரறிவாளனும் நீதியும்!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றார் பேரறிவாளன். கிட்டத்தட்ட 30 ஆண்டுகால சட்டப்போராட்டங்களுக்குப் பின்னர், அரசியல் சதிராட்டங்களுக்குப் பின்னர் நீதிமன்றத்தின் தற்றுணிவின் அடிப்படையில் அவருக்கு விடுதலை கிட்டியிருக்கின்றது.

31 ஆண்டு காலம் ஒரு மனிதனின் வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமானது என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை. மனித வாழ்வில் அது ஒரு பெரும்பகுதி. பேரறிவாளனும் அதற்கு விதிவிலக்கல்லர். அப்படியான, வாழ்க்கையின் பெரும் பகுதியை, ஒட்டு மொத்த இளமையை சிறைச்சாலையில் தொலைப்பதென்பது எவ்வளவு அபத்தம். எண்ண அலைகள் அனைத்தையும் வழக்கின் வசமே வைத்து விட்டு இன்று வருமா?, நாளை வருமா? என்றிருந்த விடியலுக்கான காத்திருப்பு 31 ஆண்டுகளின் பின்னர் மெய்ப்பட்டிருப்பதில் கொண்டாட என்னவிருக்கின்றது?

பேரறிவாளனின் வெற்றி, நிச்சயமாக நீதிக்குக் கிடைத்த வெற்றியல்ல. மாறாக ஒரு தாயின் இடைவிடாத போராட்டத்துக்குக் கிடைத்த பரிசாக இதைக் கொள்ளலாம். தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியென்பர். பேரறிவாளன் விடயத்தில் அதுதான் உண்மையும்கூட. ஆதலால், இதில் நீதித்துறையை மெச்சிக் கொண்டாடுவதற்கு ஏதுமில்லை. நீதி நேர்மையாக இருந்திருந்தால் – தன் கண்களை அகலத்திறந்திருந்தால் பேரறிவாளன் இன்று குடும்பம் குழந்தைகள் என்று இருந்திருப்பார். நீதி நேர்மையாக இருந்திருந்தால் 2017ஆம் ஆண்டு நவம்பரில் 'ராஜீவ் காந்தி கொலைக்கும் பேரறிவாளனுக்கும் எந்தத் தொடர்புமில்லை. சாட்சியங்கள் தவறாகப் பதியப்பட்டுவிட்டன' என்று குற்றப்புலனாய்வுத் துறையின் முன்னாள் அதிகாரி தியாகராஜன் தெரிவித்த பின்னராவது 'இழப்பீடுகளுடன்' விடுவிக்கப்பட்டிருப்பார். ஆனால் நடந்தது என்ன?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தற்போது இந்திய மத்திய அரசிடமிருந்து எந்த எதிர்ப்பும் இல்லை. குற்றவாளிகள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டால் அதில் புதுடில்லிக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. ராகுல் காந்திகூட 'என் தந்தையும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் கைதானவர்களை விடுவிப்பதில் எனக்கு எந்தப் பிரச்சினையுமில்லை' என்று சொல்லிவிட்டார். ஆனால், ஆளும் பாரதிய ஜனதாவோ அல்லது காங்கிரஸோ தம்மால் இந்த விடுவிப்பு நேர்ந்துவிடக்கூடாது என்பதில் விழிப்பாயிருந்தன. எதிர்கால அரசியல் நகர்வுகளைக் கருத்தில்கொண்டு அவை கள்ள மௌனம் சாதித்தன. இவ்வாறாக எதிர்ப்பே இல்லாத தருணத்தில் இப்படியொரு வழக்கையே இந்திய மத்திய அரசு கண்டுகொள்ளாமல் விட்டிருந்த பின்னணியில்தான் நீதி தன் 'போலித்தன்மையான' இருப்பை பூசிமெழுக எத்தனித்துள்ளது. அவ்வளவே.

நிற்க:


எனினும் ஒரு மனிதனின் முழு ஆயுட்சுட்டியின் இறுதி இரு தசாப்தங்களையாவது பேரறிவாளன் சிறைக்கம்பிகளுடன் தொடர்புபடாமல் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க தன் கால்போன போக்கில் விட்டுவிட வழங்கிய வாய்ப்புக்காக இந்திய உச்சநீதிமன்றத்துக்கு நன்றி கூறினாலும் அது தகும்தான்.

இந்திய நீதிக்கட்டமைப்பு, தான்.இதய சுத்தியுடன் செயற்படுவது உண்மைதான் என்றால், பேரறிவாளனுடன் இந்த வழக்கில் சிறைப்படுத்தப்பட்ட நளினி, முருகன் உள்ளிட்ட இதர ஆறுபேரின் விடுதலையையும் விரைந்து மெய்ப்பிக்க வேண்டும். அந்த விடுதலைக்கான படிமுறைகளை தமிழகத்தை ஆளும் தி.மு.கவும் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வும் இதர சட்ட நிறுவனங்களும் ஓரணியில் நின்று மேற்கொள்ள வேண்டும். செய்வார்களா?

![நாளொரு நல்வார்த்தை]

**நாளொரு நல்வார்த்தை**

"உனக்கு உதவியோரை மறக்காதே; உன்னை நேசிப்பவரை வெறுக்காதே; உன்னை நம்பியவரை ஏமாற்றாதே" - அன்னை தெரேசா




# சர்வதேசக் கட்டமைப்புக்களுடன் இணைந்து இலங்கைக்கு உதவி

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 20**

**சர்வதேசக் கட்டமைப்புக்களுடன் இணைந்து இலங்கைக்கு தன்னால் முடிந்த உதவிகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என்று தெரிவித்தார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்.**



இலங்கையில் உயர் அதிகாரிகளை தொடர்ச்சியாகச் சந்தித்துவரும் ஜூலி சங், நேற்றுமுன்தினம் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே ஜூலி சங் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச கட்டமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை அமெரிக்கா வழங்குமென அமெரிக்கத் தூதுவர் இந்தச் சந்திப்பில் மேலும் தெரிவித்தார். (ம)

# 10 ஆயிரம் அமெரிக்க டொலரையே இலங்கையர் இனி வைத்திருக்கலாம்

கொழும்பு,மே 20

இலங்கையர்கள் தமது கையில் 10 ஆயிரம் அமெரிக்க டொலரையே வைத்திருக்க முடியும் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மேலதிகமாக வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயங்களை வங்கியின் வெளிநாட்டுக் கணக்கில் வைப்புச்செய்வதற்கோ அல்லது அவற்றை ரூபாவாக மாற்றுவதற்கோ இரண்டு வாரங்கள் கால அவகாசம் வழங்கப்படும். மேலதிக வெளிநாட்டு நாணயத்தை வங்கியில் வைப்புச் செய்யாமல் கைகளில் வைத்திருப்பவர்கள், அந்த பணம் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதைத் தெளிவுபடுத்துவதற்கும் இரு வாரங்கள் கால அவகாசம் வழங்கப்படும். இரு வாரங்களின் பின்னர் உரிய அளவை விட மேலதிகமாக வெளிநாட்டு நாணயத்தை கைகளில் வைத்திருப்பவர்களுக்குத் தண்டம் விதிக்கப்படும். அது அவர்கள் கையில் வைத்திருக்கும் பணத்தொகையை விடவும் அதிகமானதாக இருக்கலாம் என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது. (க-இ)

## விவசாயத்துக்கு எரிபொருள் வழங்க எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தெரிவு

கொழும்பு,மே 20

விவசாயத்துக்கு எரிபொருள் வழங்க எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கே.டி.எஸ். ருவன் சந்திர தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலையுடன் 2022 ஆம் ஆண்டின் சிறுபோக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்லத் தேவையான எரிபொருளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (ஒ-14.இ)

நாளை 21.05.2022 சனிக்கிழமை வைகாசி 07
சுபநேரம் : 02.52 - 04.22
ராகுகாலம்: 08.52 - 10.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளத்தில் கைவைத்தால் முன்னறிவிப்பின்றி பணி நிறுத்தம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு,மே 20**

**சுகாதார அமைச்சில் உள்ள ஒரு சில அதிகாரிகளின் தன்னிச்சையான நடவடிக்கைகளால், ஊதியக்குறைப்பு ஏதேனும் முன்னெடுக்கப்பட்டால் முன்னறிவிப்பின்றி தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

எதிர்வரும் 25 ஆம் திகதிக்குப் பின்னர் முன்னறிவிப்பு இன்றி தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று அதன் ஊடகப்பேச்சாளர் கலாநிதி சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (க-இ)



## வவுனியாவைச் சேர்ந்த 8 பேர் புத்தளத்தில் கைது

வவுனியா, மே 20

வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட 8 பேர் புத்தளம் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதாகியுள்ளனர்.

புத்தளம் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினர் என்ற குற்றச்சாட்டில் குறித்த 8 பேரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அவர்கள் வவுனியா - பாலமோட்டை, குஞ்சுக்குளம், கொந்தரக்காரங்குளம், நெடுங்கேணி மற்றும் கீரிசுட்டான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல புத்தளம் வந்தனர் எனவும் தெரியவந்துள்ளது. கைதாகிய 8 பேரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ச-18)

## பொலிஸாரின் நிரப்பு நிலையங்களில் எம்.பிக்களுக்கு எரிபொருள் வழங்கல்

### சமூக வலைத்தளங்களில் கடும் எதிர்ப்பு

கொழும்பு, மே 20

நாட்டில் எரிபொருள்களுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவிவரும் இந்தக் காலத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பொலிஸாரின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள்கள் வழங்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் 121 ரூபா 19 சதம் என்ற மானிய விலையில் வழங்கப்படுகின்றது என்று சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவியுள்ளன.

நாட்டில் இரண்டு நாள்களுக்கு எரிபொருள்கள் வழங்கப்படமாட்டாது என்றும் பொதுமக்கள் நிரப்பு நிலையங்களில் காத்திருக்கவேண்டாம் என்றும் துறைசார் அமைச்சர் அறிவித்துள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எங்கிருந்து எரிபொருள் கிடைத்தது என்று அனைவரும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதேவேளை- நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பொலிஸாரின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து எரிபொருள் வழங்கப்படுகின்றமைக்கு தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். (ம)

## மஹிந்த தொடர்ந்தும் தீவிர அரசியலில்

கொழும்பு, மே 20

மஹிந்த ராஜபக்ச தொடர்ந்தும் தீவிர அரசியலில் ஈடுபடுவார் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் மஹிந்தவின் மகனுமான நாமல் ராஜபக்ச.

இது தொடர்பில் நாமல் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்த ராஜபக்சவின் அரசியல் வாழ்வு முடிந்துவிடவில்லை. அவர் தொடர்ந்தும் தீவிர அரசியலில் ஈடுபடுவார். விரைவில் அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார். எங்களிடம் ஒளிப்பதற்கு எதுவுமில்லை. நாங்கள் மக்களுடன் நிற்போம். குற்றச்சாட்டுக்களை நீதிமன்றங்களில் எதிர்கொள்வோம் - என்றார். (ம)

## புலிகள் வந்துவிட்டனர்: கூச்சலிட்டவர்கள் கைது

கொழும்பு.மே 20



விடுதலைப்புலிகள் எம்மைத் தாக்குகின்றனர் என்று கூச்சலிட்டவாறு கிராமத்துக்குள் நுழைந்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் அம்பாறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை - நவகிரியாவ காட்டிலிருந்து கூச்சலிட்டவாறு ஓடி வந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கூக்குரலிட்டவாறு சிலர் ஓடி வருவதை அவதானித்த, சிவில் பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

அதனையடுத்து அம்பாறை மற்றும் அரந்தலாவப் பொலிஸ் விசேட பிரிவினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து அந்தப் பகுதியில் சோதனை மேற்கொண்டனர். சந்தேகநபர்கள் வருகை தந்த மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி மற்றும் சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சந்தேக நபர்கள் 7 பேரும் திவுலான காட்டுப் பகுதியில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டனர். (க-இ)

## மானிய விலையில் எம்.பிக்களுக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை

### எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

கொழும்பு, மே 20

மானிய விலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருள் வழங்கப்படுவதாக வெளியான தகவல்களை எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மறுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் மேலும் உள்ளதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களுக்குத் தேவையான எரிபொருள் தற்போதைய விலையைவிட குறைவான விலைக்கே அவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான தகவலாகும். பொதுமக்களின் விரக்தியையும் கோபத்தையும் நான் புரிந்துகொண்டாலும் மானிய விலையில் எரிபொருள் வழங்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது பகிரப்பட்ட பதிவுகள் தவறானவை. பொதுமக்களுக்குத் தற்போது வழங்கப்படும் சந்தை விலையைவிட, யாருக்கும் மானிய விலையில் எரிபொருள் வழங்கப்படவில்லை - என்றார். (ம)

## எரிபொருள் பவுஸரில் வெளிவந்த தண்ணீர்

### பொலிஸார் தலையீடு

கொழும்பு,மே 20

பேராதனை - கெலிஓயா எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்த டீசல் எரிபொருள் விநியோக பவுஸரில் தண்ணீர் இருந்தமையால், எரிபொருளுக்குக் காத்திருந்திருந்தோர் குழப்பமடைந்தனர். பொலிஸாரின் தலையீட்டை அடுத்து பவுஸர் திருப்பி அனுப்பப்பட்டது.

பவுஸரைப் பரிசோதித்தபோது அதில் தண்ணீர் இருந்தமை கண்டறியப்பட்டது. அதனால் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள காத்திருந்தவர்கள் குழப்பமடைந்தனர்.

பேராதனைப் பொலிஸார் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். பெனிதெனியாவில் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மத்திய பிராந்திய காரியாலயத்துக்கு குறித்த பவுஸர் திருப்பி அனுப்பப்பட்டது.





இது தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மத்திய பிராந்திய அலுவலகத்தின் சேமிப்பக அத்தியட்சகர் அதுல ஹேரத் தெரிவிக்கையில்;

எண்ணெய் பவுஸர்களில் தண்ணீர் இருப்பது சாதாரண விடயம். பவுஸரின் முதல் பகுதியில் சிறிதளவு தண்ணீர் இருக்கும், அதனை அகற்றி எஞ்சிய எரிபொருளைப் பயன்படுத்த முடியும் - என்றார். (க-இ)

## பரீட்சை மண்டபத்துக்குள் முகக்கவசம் கட்டாயமில்லை

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள், வினாத்தாள்களுக்கு விடையளிக்கும் நேரத்தில் முகக்கவசம் அணிய வேண்டிய கட்டாயமில்லை என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்துக்குப் பிரவேசிக்கும்போதும் மற்றும் வெளியேறும் போதும் முகக்கவசம் அணிந்திருப்பது கட்டாயம்.

பாடசாலை பரீட்சார்த்தி ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருப்பின் அதிபரூடாக, பரீட்சை மத்திய நிலையத்துக்கு அறிவிக்கவேண்டும்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான பரீட்சார்த்திகள் தனிஅறையில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தர்மசேன தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகுஷிமா அணு உலைக் கழிவுநீரை கடலில் கலப்பதற்கு ஜப்பான் திட்டம்

**டோக்கியோ, மே 20**

**புகுஷிமா அணு உலையில் அணுக் கழிவுகள் நிறைந்த சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரம் தொன் கழிவுநீரை கடலில் கலப்பதற்கான திட்டத்துக்கு ஜப்பானின் அணு சக்தி ஒழுங்குமுறை ஆணையம் ஒப்புதல் வழங்கி யுள்ளது.**

இந்தத் திட்டம் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஆரம்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானில் கடந்த 2011 ஆம் ஆண்டு சுனாமி தாக்கியபோது உலகிலேயே பாதுகாப்பான அணு உலையாகக் கருதப்பட்ட புகுஷிமாவின் டாய்ச்சி அணு உலைக்குள் கடல்நீர் புகுந்தது. இதில் அந்த அணுஉலைகள் சேதமடைந்தன.

இதனால் சுற்றியுள்ள பகுதிகளில் கதிர் வீச்சுத் தாக்கியது. அத்துடன் 10 ஆண்டுகள் கடந்தும் மக்கள் வசிக்க முடி யாத அளவுக்கு கதிர்வீச்சின் தாக்கத்தை இன்னமும் கக்கிக் கொண்டிருக்கிறது அந்த உலை.

இந்த நிலையில் புகுஷிமா அணு உலையில் அணுக் கழிவுகள் நிறைந்த சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரம் தொன் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொட்டி களில் பாதுகாப்பாகச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அணுக்கழிவுகள் நிறைந்த கழிவுநீரை கடலில் திறந்துவிடும் திட் டத்தை ஜப்பான் அரசு நீண்டகால மாகப் பரிசீலித்து வருகிறது.

எனினும் இந்தத் திட்டத்துக்கு மீனவர்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்தநிலையில் அணுக்கழிவுகள் அகற்றப்பட்ட கழிவுநீரை கடலில் திறந்துவிடும் திட்டத்துக்கு ஜப்பானின் அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி பாதிக்கப்பட்ட ஆலையில் இருந்து சுமார் 1கி.மீ. தொலைவில் உள்ள பசுபிக் பெருங்கடலில் கடலுக்கு அடியில் ஒரு சுரங்கப்பாதை மூலம் கழிவுநீரை வெளியேற்றுவதே அரசின் திட்டம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கோதுமை ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதிப்பு



புதுடில்லி, மே 20

இந்தியாவில் விலைவாசி கடுமையாக அதிகரித்துள்ளதால் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஒன்றாக கோதுமை ஏற்று மதியை இந்தியா நிறுத்தியுள்ளது.

உலக நாடுகளுக்கு கோதுமையை ஏற்றுமதி செய்வதில் ரஷ்யா- உக்ரைன் முன்னணியில் உள்ள போதும் போர் காரணமாக இரு நாடு களும் ஏற்றுமதியை நிறுத்திவிட்டன. இந்த இடத்தை நிரப்ப இந்தியா முன்வந்த நிலையில் தற்போது உள்நாட்டு சூழலை கருத்தில் கொண்டு ஏற்றுமதியை நிறுத்துவதாக இந்தியாவும் அறிவித்துள்ளது.

இதனால் உலகநாடுகளில் உணவுப் பொருள்களின் விலை உயரும் அபாயம் ஏற்படும் என ஜி-7 நாடுகள் தெரிவித்துள்ளன. (ச-இ)

## ஆண்டவர் அழைப்பின் 31ம் நாள் நினைவு கூறல்

அன்னை மடியில்
16 • 02 • 1947
நாரந்தனை



ஆண்டவர் அணைப்பில்
21 • 04 • 2022
வவுனியா

கடந்த 21.04.2022 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது தாயார்

**அமரர் திருமதி ஞானராஜா லூர்துமலர்**

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம்
நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்.
யோவான் 11:25

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக
இறம்பைக்குளம் புனித அந்தோனியர் ஆலயத்தில்

21.05.2022 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கு கொண்டு செபிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல, 116/A லூர்ட்ஸ்வாசம்,
கூசைப்பிள்ளையார் குளம்,
வவுனியா.

குடும்பத்தினர்
076 564 0668, 077 721 4316

# வடகொரியாவில் கொரோனா கோரத் தாண்டவம்

- இதுவரை 15 லட்சம் பேர் பாதிப்பு
- அண்டைநாடுகளின் உதவியையும் ஏற்க மறுப்பு



பியாங்யாங், மே 20

வடகொரியாவில் காட்டுத்தீ போல் பரவிவரும் கொரோனாத் தொற்றால் இதுவரை 15 லட்சம் பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வாரம் வடகொரியாவில் முதன் முறையாக கொரோனாவின் திரிபான ஒமிக்ரோன் தொற்று கண்டறியப்பட்டது.

இதனையடுத்து தொற்றுப் பரவலைத் தடுக்கும் முகமாக நாடுமுழுவதும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப் பட்டது. இந்தநிலையில் வடகொரியாவில் கொரோ னாவுக்கு 15 லட்சம் பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் எனவும் இதுவரை 56 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதேவேளை வடகொரியாவின் அண்டை நாடான தென்கொரியா, உலக சுகாதார அமைப்பு மற்றும் சீனா போன்றவை தடுப்பூசிகள், முகக்கவசங்கள் மற்றும் சோதனைக் கருவிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை அனுப்பி உதவிக் கரம் நீட்ட முன்வந்துள்ள நிலையில் அவற்றை வடகொரியா நிராகரித்துள்ளது.

இந்தப் பாதிப்பு வடகொரியாவுக்கு ஏற்பட்டுள்ள பெரும் சவால் என வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வடகொரியாவில் சிகிச்சைக்குத் தேவையான உட்கட்டமைப்புகள் இல்லாத மருத்துவமனைகள், தீவிர சிகிச்சைப்பிரிவுகள் இன்மை, போதிய கொரோனா வைரஸ் சிகிச்சை மருந்து வகைகள் இல்லாமை, கொரோனாவை சோதிக்கும் வெகுஜன சோதனை முறைகள் இல்லாமை ஆகியவை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# விளாடிமீர் புடின் கனடாவுக்குள் நுழையத் தடை



ஒட்டாவா, மே 20

ரஷ்யா ஜனாதிபதி புடின் மற்றும் அந்தநாட்டு இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பலர் கனடா நாட்டுக்குள் நுழையத் தடை விதிக்கப்படுகிறது என கனடா நாட்டு நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி புடின் மற்றும் அந்நாட்டு இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உக்ரைன் வழியாக நுழைய கனடா தடை ஏற்படுத்தியுள்ளது.

"எங்கள் நாட்டுக்குள் நுழைவதைத் தடைசெய்வது ரஷ்யாவை அதன் குற்றங்களுக்குப் பொறுப்பேற்கும் பல வழிகளில் ஒன்றாக இருக்கும்" என கனடாவின் பொதுப் பாதுகாப்பு துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

### பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடி

# ஆடம்பரப் பொருள்கள் இறக்குமதிக்குத் தடை



இஸ்லாமாபாத், மே 20

பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில் ஆடம்பரப் பொருள்களை இறக்குமதி செய்ய பாகிஸ்தான் அரசு தடைவிதித்துள்ளது.

நிதிபற்றாக்குறை, அதிகரித்துவரும் பணவீக்கம், குறைந்து வரும் அந்நியச் செலாவணிக் கையிருப்பு மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மை எனப் பல்வேறு பிரச்சினைகளை பாகிஸ்தான் எதிர்கொண்டுள்ளது.

இந்தநிலையில் நாட்டின் பொருளாதார நிலை குறித்து ஆய்வு செய்ய பிரதமர் ஷபாஸ் ஷெரீப் தலைமையில் நேற்று முன்தினம் விசேட கூட்டம் நடைபெற்றது. அதில் அத்தியாவசியமற்ற மற்றும் ஆடம்பரப் பொருள்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்க முடிவு எடுக்கப்பட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயுத் தட்டுப்பாடு நீங்க ஒன்றரை மாதம் எடுக்கும்




கொழும்பு, மே 20

நாட்டில் தற்போது நிலவும் எரிவாயுத் தட்டுப்பாடு நீங்க இன்னும் ஒன்றரை மாதம் தேவை என்று லிற்றோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது தேவையின் நிமித்தம் ஒரு நாளைக்கு 30 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. மோசமான வானிலை காரணமாக கப்பலில் இருந்து எரிவாயுவை இன்னும் இறக்க முடியவில்லை.

எனவே, எரிவாயு விநியோகம் தாமதமாகும். மக்கள் வரிசையில் நிற்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (கு-இ)



## ஊடகவியலாளர்களுக்கு நாடாளுமன்றில் கட்டுப்பாடு

### எதிர்க்கட்சி சீற்றம்

கொழும்பு, மே 20

ஊடகவியலாளர்கள் இருவரின் கைத்தொலைபேசிகளை பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்கள் பறிமுதல் செய்த சம்பவத்தை அடுத்து, ஊடகவியலாளர்களுக்கு நாடாளுமன்றில் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டன. இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் கடும் விமர்சனத்தை முன்வைத்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று பொதுஜன பெரமுனவின் குழுக் கூட்டம் நடைபெற்று முடிந்த நிலையில், அதனைக் கைத்தொலைபேசியின் மூலம் காணொலிப்படுத்தினர் என்று குற்றம் சுமத்தப்பட்ட இரண்டு ஊடகவியலாளர்களின் கைத்தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இது பற்றிய விசாரணை நடத்தப்படும் என்று சபாநாயகர் அறிவித்தார். தமது தீர்மானத்தையும் அறிவித்தார்.

தீர்மானத்தின்படி, நாடாளுமன்றின் மருத்துவ மத்திய நிலையத்தில் இருந்து நூலகம் வரையிலான பிரதேசத்தில் மாத்திரமே ஊடகவியலாளர்களால் காணொலி எடுத்தல் மற்றும் குரல் பதிவுகளை மேற்கொள்ளமுடியும். குழுக்கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் ஊடகவியலாளர்களால் குரல் பதிவுகளைச் செய்யமுடியாது என்று சபாநாயகர் தெரிவித்தார். சபாநாயகரின் தீர்மானத்தை எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடுமையாக விமர்சித்தார். குழுக்கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் இருந்து தான் உட்பட்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகங்களுக்கு கருத்துக்களை வழங்கியுள்ளோம் என்று சுட்டிக்காட்டினார். ஊடகவியலாளர்களின் கருவிகளைப் பறிமுதல் செய்வதற்கு நாட்டின் ஜனாதிபதிக்குக் கூட அதிகாரம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (கு-இ)

## அவுஸ்திரேலியா செல்ல முயற்சி; புதுக்குடியிருப்பில் சிக்கிய 21 பேர்

சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியா செல்வதற்கு முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில், மட்டக்களப்பு புதுக்குடியிருப்புக் கடற்கரையில் 21 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, விசேட அதிரடிப்படையினர் புதுக்குடியிருப்புக் கடற்கரையைச் சுற்றிவளைத்துள்ளனர்.

இதன்போது இரு படகுகளில் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகச் செல்வதற்குத் தயாராகவிருந்த 21 பேர் கைது செய்யப்பட்டதுடன் இரு படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (கு-இ)

## சேமசிங்கவின் வீட்டில் 60 பவுண் நகைகள் மாயம்

கொழும்பு, மே 20

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவின் வீட்டில் 60 பவுண் தங்க நகைகள் காணாமல் போயுள்ளன. இது தொடர்பில் அவரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போதே நகைகள் காணாமல் போயுள்ளன என்று அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (கு-இ)

## துமிந்தவின் வீட்டில் கைத்துப்பாக்கி மாயம்

கொழும்பு, மே 20

அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவின் வீட்டில் இருந்த 9 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கி ஒன்று காணாமற்போயுள்ளது.

அனுமதிபெற்ற கைத்துப்பாக்கியே காணாமற்போயுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரர், அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவின் வீட்டுக்கும், அலுவலகத்துக்கும் தீ வைக்கப்பட்டது. இதன்போதே குறித்த கைத்துப்பாக்கி காணாமற்போயுள்ளது என்று அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (கு-இ)

## குற்றவியல் திணைக்களத் தேவைப்படி நீதிமன்றம் கடமைகளைச் செய்யாது!

### கோட்டை நீதிவான் திலின அதிருப்தி

நீதிமன்ற விசாரணைகளின்போது குற்றவியல் திணைக்களத்தினர் உரிய நேரத்துக்கு வருவதில்லை என்று தனது கடும் அதிருப்தியைத் தெரிவித்தார் நீதிவான் திலின கமகே.

'கோத்தா கோ ஹோம்'வில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சனத் நிஷாந்த மற்றும் மிலான் ஜயதிலக்க ஆகியோருக்கு எதிரான வழக்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே நீதிவான் இதனைக் கூறியுள்ளார்.

இந்த வழக்கில் சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி ஹிரியாகம முன்னிலையாவார் என குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர். பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வரும் வரை வேறு வழக்கை விசாரிக்குமாறும் குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் கோரினர்.

இதன்போது கருத்து வெளியிட்ட நீதிவான்,

'இப்படி வழக்குகளை விசாரிக்க முடியாது. நான் பிற்பகல் 3 மணிக்கு நீதிமன்றத்தில் இருந்து சென்று விடுவேன். கடந்த செவ்வாய்க்கிழமை (17ஆம் திகதியன்று) நான் பிற்பகல் 4 மணி வரை காத்திருந்தேன். பின்னர் இரவில் சந்தேக நபர்களை வீட்டுக்கு அழைத்து வந்தனர்.

குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்கு வசதியானபடி இரவு 10, 12 மணிக்கு வழக்கு விசாரணைகள் நடத்தப்படுவதில்லை. குற்றவியல் விசாரணைத் திணைக்களம் உரிய நேரப்படி வேலை செய்ய வேண்டும்' - என்றார். (ம)

# சிங்கத்தைப் போன்றவர் இன்று பூனையாகிவிட்டார்

## மஹிந்தவின் நிலை குறித்து சந்திம எம்.பி. வேதனை

கொழும்பு, மே 20

முப்பது வருடங்களான போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்த ராஜபக்ச சிங்கம் போன்று நாடாளுமன்றுக்கு வந்திருக்க வேண்டியவர். ஆனால் இன்று பூனை போன்று இரகசியமாக வந்து, எலியைப் போன்று வெளியேறும் நிலைமை அவருக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர், நாடு மதிக்கும் தலைவரான முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை 'வீட்டுக்குப் போ' என்று கூறும் நிலைக்கு நாட்டு மக்கள் வந்துவிட்டனர் என்றும் தெரிவித்தார். (கு-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கலாதரம் மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மே 20
சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவால் 2022 ஆம் ஆண்டு "கலாதரம் மலர்-4" என்ற பிரதேச மலர் வெளியீடு செய்யப்படவுள்ளமையால் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட எழுத்தாளர்களிடம் ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு, கலை கலாசாரம், சமயம், மருத்துவம், பாரம்பரியங்கள், பிரதேச ஆளுமைகள் தொடர்பான தகவல்கள், வாழ்வியற் கோலங்கள், இடப்பெயராய்வுகள், சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய விடயப்பரப்புக்களில் ஒன்றை உள்ளடக்கி ஆக்கங்களை வரைந்து தங்களுடைய சுயவிவரங்களையும், சிறிய ஒளிப்படத்தையும் இணைத்து எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர், கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வலி தென்மேற்கு, சண்டிலிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் அனைத்தும் மலர்க்குழுவின் தீர்மானத்தின் பின்னரே பிரசுரிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## நுழைவிசைவு பெற்றுச் சென்ற
# 6 பேர் இந்தியாவிடம் புகலிடக் கோரிக்கை!

புதுடில்லி, மே 20
இலங்கையில் இருந்து நுழைவிசைவு பெற்று விமானம் மூலம் இந்தியாவுக்குச் சென்ற ஆறு பேர் புகலிடக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இலங்கையில் தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமை நீடிக்கின்றது என்றும் தற்போது நிலவும் கடும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமை உடன் தீரும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதன் அடிப்படையில் தம்மை அகதிகளாக ஏற்றுக்கொள்ளுமாறும் அவர்கள் தமது கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இவர்கள் மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-20)

## எரிபொருள் தட்டுப்பாடு கழிவகற்றல் தடைப்படும்

சாவகச்சேரி, மே20
எரிபொருள் தட்டுப்பாட்டால், உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் கழிவகற்றல் பணிகள் இடைநிறுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை, நகரசபைகள், பிரதேசசபைகள் போன்றவை தினமும் கழிவகற்றலுக்கு வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்றன.

அண்மைக்காலமாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதால், வாகனப் பாவனைகள் சபைகளால் மட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனால் கழிவகற்றல் பணிகள் எந்நேரமும் நிறுத்தப்படலாம்.

எனவே பொதுமக்கள் தமது வாழ்விடங்களில் காணப்படும் கழிவுகளை வீதிகளில் வீசாமல் உரப்பைகளில் இட்டுவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## சாவகச்சேரியில் நாளை குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், மே 21
சாவகச்சேரி நகர விளையாட்டுக்கழகத்தின் பொன்விழாவையொட்டி குருதிக்கொடைமுகாம்நாளை 21ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள ஸ்ரீபழனி அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனையில் குருதி வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என அறிவிக்கப்பட்டதையடுத்து குறித்த குருதிக்கொடை முகாம் சாவகச்சேரி நகர இளைஞர்களால் மேற்கொள்ளப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-9)

## திறப்பு விழாவும் கௌரவிப்பும்

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் இந்து ஆருத்ரா கலையரங்கத் திறப்பு விழாவும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் சித்திபெற்ற மாணவர்கள் நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14-159)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை காலை 8.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 30 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14)





## இராணுவத்தால் புனரமைக்கப்பட்ட விளையாட்டுக் கழகம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 20
தெல்லிப்பழை தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் மைதானம் இராணுவத்தால் புனரமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாணக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாப்பா, கிராம அலுவலர், பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர், ஸ்ரார் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14)

## வன்னிப் பிராந்திய
## பிரதிப் பொலிஸ்மா அதிபர் கடமையேற்பு

வவுனியா, மே 20
வன்னிப்பிராந்திய புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக, கேகாலை மாவட்டத்தில் கடமையாற்றிய கே.சந்தன அழகக்கோன் அண்மையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அதேவேளை முன்னர் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜயசிறி, கொழும்பு விசேட பிரிவு மற்றும் சிறுவர் பெண்கள் பிரிவுக்கு இடமாற்றப்பட்டுள்ளார். (க-110)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப்பேரவைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் பேரவை அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## சாவகச்சேரி நகரசபைக்குள்
## காணி கொள்வனவு செய்வோர் ஆவணத்தை உறுதிப்படுத்துக
### தவிசாளர் சிவமங்கை இராமநாதன் அறிவிப்பு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணி கொள்வனவு செய்ய விரும்புவோர் நகரசபை ஆதனவரிப் பிரிவுடன் தொடர்புகொண்டு ஆவணங்களை உறுதிப்படுத்திய பின்னர் கொள்வனவு செய்யுங்கள் என்று சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.

ஆதனங்கள் கொள்வனவின்போது ஏற்பட்ட குளறுபடிகள் தொடர்பான முறைப்பாடுகள் சபைக்கு அறிவிக்கப்பட்டு வருவதால் காணி கொள்வனவு செய்வோர் காணி உரிமம் தொடர்பான உறுதிப்படுத்தலின் பின்னர் கொள்வனவு செய்யுமாறு அவர் அறிவித்துள்ளார். (ம-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோப்பாயில்...

இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் பலர் இந்த வழிப்பறிக் கொள்ளையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மட்டும் 7 பேரிடம் பணம் மற்றும் கைபேசி என்பன கத்திமுனையில் அச்சுறுத்திக் கொள்ளையிடப்பட்டுள்ளன. கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும், கோப்பாய் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை எனப் பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இலங்கை போக்குவரத்துச் சபையின் 6 ஊழியர்கள் மற்றும் பத்திரிகை விநியோகம் செய்பவர் என 7 பேரிடம் 70 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணமும், . பல லட்சம் ரூபா பெறுமதியான கைபேசிகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கோப்பாய் பகுதியில் உள்ள கோழிப்பண்ணைக்கு முன்பாகவே இந்தக் கொள்ளைகள் நடந்துள்ளன. முகங்களை மறைக்கும் "மங்கி" குல்லா அணிந்த நால்வரே கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். வீதியால் பயணிப்போரை மறித்து பொலிஸார் என்று அறிமுகப்படுத்தும் கொள்ளையர்கள், அடையாள அட்டையைக் கேட்டு அச்சுறுத்தியுள்ளனர். திடீரென கத்தியைக் கழுத்தில் வைத்து அச்சுறுத்தி வழிப்பறியில் ஈடுபடுகின்றனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

பருத்தித்துறையில் இருந்து கோண்டாவில் சாலைக்குப் பயணித்த இருவரிடம் இருந்தும் 30 ஆயிரம் ரூபாவும், பெறுமதியான கைபேசிகளும் கத்திமுனையில் கொள்ளையிடப்பட்டுள்ளன. அண்மைய நாள்களாக அந்தப் பகுதியில் தொடர்ச்சியாக வழிப்பறிக் கொள்ளை நடைபெறும் நிலையில், கோப்பாய் பொலிஸார் இது தொடர்பில் அசமந்தமாகச் செயற்படுகின்றனர் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (அ-எ-26)

### மண்ணெண்ணெய்க்கு...

என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குத் தேவையான மண்ணெண்ணெய் அளவை விடவும் அதிகளவு மண்ணெண்ணெய் கொழும்பில் இருந்து தருவிக்கப்படுகின்றது. எனினும் மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவில்லை. தற்போது கடந்த காலங்களை விடவும் மக்கள் அதிகளவு மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதும் தட்டுப்பாட்டுக்குக் காரணமாக இருக்கின்றது - என்றார். (அ-எ-26)

### பாடசாலைகளுக்கு...

பாடசாலைகளுக்கு 2022ஆம் கல்வியாண்டுக்கான முதலாம் தவணை விடுமுறை இன்று வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்பட்டுள்ளது என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

விடுமுறை நிறைவடைந்து இரண்டாம் தவணைக் கற்றல் நடவடிக்கைக்காக பாடசாலைகள் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை அடுத்தே பாடசாலைகளுக்கும் விடுமுறை முற்கூட்டியே வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக க.பொ.த.சாதாரணப் பரீட்சைக்காக எதிர்வரும் 23ஆம் திகதிமுதல் விடுமுறை வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. எனினும் தற்போது இன்று முதல் விடுமுறை நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது.

அதேவேளை, ஆசிரிய கலாசாலைகளுக்கு இந்த விடுமுறை வழங்கப்படாது என்றும், இந்தக் காலப்பகுதியில் அவர்கள் இணையவழிக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-எ-இ)

### புதிய...

சர்களாகப் பதவி ஏற்பவர்களுக்கு அமைச்சுக்கான சம்பளம் வழங்கப்படாது என்று பிரதமர் ரணில் விக்கிரசிங்க அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமைச்சர்களுக்கு வழமையாக வழங்கப்படும் சில சலுகைக் கொடுப்பனவுகளும் துண்டிக்கப்படும். அரசாங்கத்தின் செலவினங்களைக் குறைக்கும் நோக்கில் இந்தத் தீர்மானத்தை எடுக்கப்பட்டுள்ளது. இதற்குப் புதிய அமைச்சர்கள் இணங்க வேண்டும் - என்றார். (அ-எ-44)

### அத்தியாவசிய...

சமுகமளிக்கத் தேவையில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எரிபொருள் கப்பல்கள் வருகின்றன. இருந்தாலும் தற்போதே வரிசை யுகம் முடியாது. நீளும் வரிசையை மட்டுப்படுத்தவே முயற்சிக்கின்றோம். முதலில் எரிபொருளை களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் ஒரு கப்பல் தாமதித்தால்கூட மீண்டும் பிரச்சினை ஏற்படும். ஜுன் நடுப்பகுதி வரை எரிபொருள் கைவசம் உள்ளது.

சமையல் எரிவாயு விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் லிற்றோ நிறுவனத்தின் பிரதானிகளை நாளை (இன்று) அழைத்து, விசாரித்து அறிக்கையொன்றை முன்வைக்க வேண்டும் என்று கோப் குழுவின் தலைவரிடம் கேட்டுக்கொள்கின்றேன். மக்கள் துன்பப்படும்போது, அதிகாரிகள் பொறுப்பற்ற விதத்தில் செயற்படக்கூடாது.

அதேவேளை, அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோரைத்தவிர, ஏனைய அரச ஊழியர்கள் நாளை (இன்று) கடமைக்கு சமுகமளிக்க வேண்டியதில்லை. இதனால் எரிபொருளை சேமிக்க முடியும். அதேபோல தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும் என்று மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். ஜுன் நடுப் பகுதிவரை எரிபொருள் கைவசம் இருப்பதால், சாதாரண தரப்பரீட்சைக்கு தாக்கம் எதுவும் ஏற்படாது - என்றார். (அ-எ-44)



கியூடெக் - கரித்தாஸ் ஒருங்கிணைந்த சமூக மேம்பாட்டு சிறுவர் கழகங்களுக்கான ஓவியப்போட்டி 'மனித மாண்பை மதிப்போம்' எனும் கருப்பொருளில் கியூடெக் - கரித்தாஸ் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கியூடெக் - கரித்தாஸ் இயக்குநர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் தலைமையில் மூன்று பிரிவுகளாக இந்த ஓவியப்போட்டி நடைபெற்றது. (ம-14)

### வரணியில்...

ஊனதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் புலோலி - கச்சாய் வீதியில், வடவரணிப் பகுதியில் நேற்று நடந்துள்ளது. இதில் துன்னாலையைச் சேர்ந்த அருந்தவராஜா அஜந்தன் (வயது-30) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப் படுகின்றன. (அ-எ-26)


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 . 11 . 1951 |  | 19 . 05 . 2022 |

### திரு. சோமசுந்தரம் ஜெகசீலன்
[ வெளிநாட்டில் பணிபுரிந்தவர் - ஓமான்]

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், 9/5 கலட்டி முந்தல் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சோமசுந்தரம் ஜெகசீலன் அவர்கள் நேற்று (19.05.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் சிவசோதி தம்பதியினரின் கனிஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற ஞானசுந்தரம் நாகரஞ்சிதம் தம்பதியினரின் அன்பு மருமகனும், தமயந்தியின் அன்புக்கணவரும், ஜனனி, ஜனந்தன், ஜனாலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரபாகரன், பிரதீபாவின் அன்பு மாமனாரும் கிருஷ்ணி, ஆதிஷ் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற லிங்காவதி, அருந்ததி, புனிதவதி, தனசீலன் மற்றும் பத்மாவதி, குகசீலன், குகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வசந்தி மற்றும் ஆனந்தகுமார், ஜெயந்தி, ஞானக்குமார், உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 1.00 மணியளவில் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9/5 கலட்டி முந்தல் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

தகவல்: குடும்பத்தினர்.



## தசாஹ கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் சுபகிருது வருடம் சித்திரை மாதம் 28ம் நாள் (11.05.2022) புதன்கிழமை நாகபூசணி அம்பாளின் பாதக்கமலங்களில் சரணடைந்த

### அமரர் ஸ்ரீமதி பர்வதவர்த்தினி அம்மா முத்துக்குமாரசாமிக் குருக்கள்



அவர்களின் ஆத்ம ஈடேற்ற கிரியைகள் எமது இல்லத்தில் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

20.05.2022 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு தசாகம்

21.05.2022 சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு ஏகோதிஷ்டம், மாசிகம்

22.05.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு சபிண்டீகரணம்

23.05.2022 திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு கிருஹயக்ஞம், ப்ராமண சமாராதனை

24.05.2022 செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் இடம்பெறும் அம்மாவின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் குடும்ப சமேதராய் கலந்துகொள்ளுமாறு [illegible]கின்றோம்.

[illegible] குருவாசம்,
குருக்கள் ஒழுங்கை , கோப்பாய் வடக்கு.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாச்சார்ய அபிஷேக வாழ்த்து




மங்கலகரமான சுபகிருது வருஷம் வைகாசி மாதம் 06 ஆம் நாள்
20.05.2022 வெள்ளிக்கிழமை மீசாலை இலந்தைக் கூடல்
வீரகத்திப் பிள்ளையார் திருக்கோயிலில் நிகழும்
எமது ஆதீன பரம்பரையில் வந்துதித்த

**ப்ரம்மஸ்ரீ முத்துசாமி குருக்கள், ப்ரம்மஸ்ரீ துரச்சாமி குருக்கள்,**
**ப்ரம்மஸ்ரீ கல்யாண சுந்தரக்குருக்கள்,**
**ப்ரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய சர்மா,**
**ப்ரம்மஸ்ரீ சுந்தரபால முரளிதரக்குருக்கள், ஸ்ரீமதி நாகபூஷணி**
**தம்பதிகளின் புதவல்வன் ப்ரம்மஸ்ரீ ரமானந்த சர்மா** (ரமானந்)

அவர்களின் சிவப்பணியில் சிறப்புகள் பல பெற்று பாரம்பரிய
பண்புகளோடு பல்லாண்டு வாழ வாழ்துகின்றோம்.

**இல்ந்தைக்கூடல் வீரகத்திப் பிள்ளையார்**
**திருக்கோயில் கேணியடி வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.**

**ஆதீனகர்த்தாக்கள்**

(cs.44751) (2.6)

# பசுப்பாலில் உற்பத்தி செய்யப்படும் பால்பொருள்கள் விற்பனைக்குண்டு

எமது சங்கத்தின் உற்பத்திப்பொருள்களான
**நெய், மில்க்ரொபி, நிகழ்களுக்கு சுடுபால், பதனிடப்பட்ட பால்பைக்கற், பனீர், மில்க்லொலி, சுவையூட்டிய பால்பைக்கற், யோக்கட், ஐஸ்கிறீம், கப்தயிர்** போன்றவை விற்பனைக்குண்டு.
ஆர்வமுள்ளவர்கள் நேரில் தொடர்புகொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றேன்.

**பொதுமுகாமையாளர்,**
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறச் சங்கம் (வ-து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**
**021 321 2926**

(cr. 35990) (2.6)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்
**பண்டிதர் வயித்திலிங்கம் பேரின்பநாயகம்**

அகில இலங்கை திருமுறை மன்றத் தலைவர் திரு. வயித்திலிங்கம் பேரின்பநாயகம் அவர்களின் மரணச் செய்தி அறிந்து மிகவும் வருத்த மடைந்தோம்.

அன்னாரின் ஆன்மா இறைவனின் திருவடியில் அமைதிபெற பிரார்த்திக் கின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது இரங்கலை தெரிவிக்கின்றோம்.

தர்மகர்த்தாசபை
**வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானம்**
**யாழ்ப்பாணம்**

# ஆசிரியர்களின் பிரிவுபசார விழா

சாவகச்சேரி, மே 20

மிருசுவில்- விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்செல்லும் ஆசிரியர்களுக்கான பிரிவுபசார விழா நேற்று வித்தியாலய சமூகத்தால் நடத்தப்பட்டது. அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வித்தியாலய சமூகத்தினரால் ஆசிரியர்கள், மாலை அணிவிக்கப்பட்டு வாழ்த்துமடல் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஓ-14.9)

# ஹோட்டலில் பதிவு செய்ய கோரிய எம்.பிக்கள்


வீடு திரும்புவதற்கு எரிபொருள் இல்லையென்றால் தங்குவதற்கு ஹோட்டல் ஒன்றை முன்பதிவு செய்து தர வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை முன்வைத்துள்ளனர் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி பொலிஸ் போக்குவரத்து பிரிவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருள் வழங்குவது தொடர்பில் இன்று நாடாளுமன்றத்தில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. சபாநாயகர் இவ்வாறு கோரிக்கை விடுத்தமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருந்தனர். (எ-இ)

# மரண அறிவித்தல்

## அமரர் ஐயாத்துரை துரைரட்ணம்

**(ஓய்வுபெற்ற சாரதி இ.போ.சபை)**



நெடுந்தீவை பிறப்பிடமாகவும், இராசவீதி கோப்பாய், பாண்டியன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் ஐயாத்துரை துரைரட்ணம் நேற்று முன்தினம் (18.05.2022) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பொன்னம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற சுப்ரமணியம் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், சந்தானலட்சுமியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், மேனன் (ஆசிரியர் - யா/நெ/றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி), சுகன்யா (லண்டன்), லாவண்யா (ஊவா வெல்லஸ பல்கலைக் கழகம்), கோகுலன் (3ஆம் வருட மாணவன், கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரதீஸ்வரனின் (லண்டன்) அன்பு மாமனாரும், இராசரட்ணம் (ஓய்வுபெற்ற அதிபர்), தயாபரன் (ஆசிரிய ஆலோசகர், யாழ். கல்வி வலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நடராசலிங்கம், இராசலிங்கம், தியாகலிங்கம், ஸ்ரீதரலிங்கம், காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் யோகலட்சுமி, கனகலட்சுமி, மகாலட்சுமி, விஜயலட்சுமி, கலாஜோதி, தவாஃஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (22.05.2022) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராசவீதி, கோப்பாய் தெற்கு.**
**077 886 5550**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 8941)-6

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 09 . 1940



மறைவு
19 . 05 . 2022

## திருமதி விஜயலக்சுமி இராமேஸ்வரன்

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை -
யாழ். நடேஸ்வரா கல்லூரி, குளமங்கால் றோ.க.வித்தியாலயம்)

வேதவனம் வளவு தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் 8 ஆம் கட்டை துர்க்காபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலக்சுமி இராமேஸ்வரன் நேற்று (19.05.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராஜராஜேஸ்வரி தம்பதிகளின் புதல்வியும், நாகரட்ணம் - சிவபாக்கியபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தர்மபூபதியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பரமானந்தத்தின் மைத்துனியும் சதீஸ்குமரனின் பாசமிகு தாயாரும், திவிகராவின் அன்பு மாமியாரும், பிரதுக்ஷா, ஸ்ரீஹரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2022) வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்

**8 ஆம் கட்டை,**
**மல்லாகம்.**
**077 078 1496**

(cs 44754) (2.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) மலைவேம்படி மாட்டு இறைச்சிக் கடை - 01.06.2022 – 31.12.2022 வரை குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் 2022

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி :- 27.05.2022 வெள்ளிகிழமைநண்பகல 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும இறுதித் திகதி :- 27.05.2022 வெள்ளிகிழமை பி .ப 02.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 27.05.2022 வெள்ளிகிழமை பி .ப 02.30 மணி

| இல | குத்தகைவிபரம் | மாத . வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 01 | மலை வேம்படி மாட்டு இறைச்சிக் கடை | 2,000.00 | 24,350.00 | 1,000.00 | 1,000.00 |

குறிப்பு :
* மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021 2241130 என்னும் அலுவலக தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்..

திரு.சோமசுந்தரம் சுகிர்தன்,
தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வலிகாமம் வடக்குபிரதேச சபை,
காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி).

19.05.2022

# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு.சிவச்சந்திரன்
அவர்களின் அன்பு மாமனார்
**இராசா பொன்குமார்**
அவர்கள் கடந்த (16.05.2022) திங்கட்கிழமை காலமானார்.
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



**ஆசிரியர் வட்டம்**
**யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

# தேவை

பதவி - **முகாமையாளர்**
விலாசம் - **அன்பு சிறுவர் இல்லம், கிளிநொச்சி**
முன்னுரிமை - **ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்களுக்கு**
சம்பளம் - **ரூ 40,000 இற்கு மேல்**
ஏனையவை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு
**071 535 4500**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Invitation for Bids (IFB)
### Maintenance & Service of Intercom Telephone system at Teaching Hospital – Jaffna for Year 2022/2023

01. The Chairman, Regional Procurement Committee invites sealed bids from eligible and experienced and reputed qualified Applicants for Annual Maintenance Services of NEC SVS 8100 IP PABX Intercom at Teaching Hospital, Jaffna, for the year 2022/2023 as described below.

02. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) method.

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and bidder shall be registered under Telecommunication Regulatory Commission (TRC) for supply and maintenance of Communication Equipments and possess Business Registration for this purpose.

04. A Complete set of bidding documents in English language may be purchased by interested bidders from the Administrative Office of the Teaching Hospital - Jaffna, on working days between 09:00 am. and 03:00 pm from 2022-May-20 to 2022-June-05on submission of a written request to the address below and payment of a non-refundable fee of Rs. 1,500.00 with the certified copy of the following documents.
- A copy of the Business Registration Certificate
- A copy of Telecommunication Regulatory Commission (TRC) license

05. The Intercom System can be inspected on working days between 09:30 am. and 03:00 pm. up to 2022-June-5.

06. Sealed bids shall be deposited with duplicate in the tender Box made available at Director, Teaching Hospital Jaffna or sent by registered post addressed to the Director, Teaching Hospital Jaffna at the above address to reach him on or before 10.00 am on2022-June-6. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders representatives who choose to attend at the above address.

07. All bids must accompanied a bid security issued by a reputable bank in Sri Lanka amounting for LKR 100,000.00 for the validity period of 119 days (up to 03.10.2022) the Bidder or one of his representatives is permitted to be present at the opening of the bids.

08. The Director Teaching Hospital. Jaffna reserves the right to reject any or all Bids and the right to accept any portion of a bid, at any time prior to awarding of a contract without giving any reasons for such .Clients not bound to accept the lowest or any bids.

09. Interested eligible bidders may obtain further information from Hospital Secretary at Teaching Hospital- Jaffna, on working days between 9:00 a.m. and 2:30 p.m.

09. Pre-bid meeting will be held at 10.00 am on 2022-May-27 at Directors offices, Teaching Hospital Jaffna.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.

2022-May-20 (CR 35988) (3/6)

# கிருஷ்ணா அடைவுகடை

பதிவு.இல. J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2021ம் ஆண்டு 30.06.2021 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2022ம் ஆண்டு ஆனி மாதம் 30ம் திகதி (30.06.2022) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் (30.06.2022) ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:- 2021ம் ஆண்டு 06ம் மாதம் 30ம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.**

உரிமையாளர்

இல:- 370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311

இல.09 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046

# கைலாச பிள்ளையார் கோயில்
## பொதுக்கூட்ட அறிவித்தல் 2022

கைலாச பிள்ளையார் கோயிலின் திருப்பணி நிலைப்பாட்டை அடியார்களுக்கு அறிவிப்பதற்கும், கும்பாபிஷேகம் தொடர்பான விடயங்கள் கலந்தாலோசிப்பதற்கும்.


மேற்படி கூட்டமானது கைலாச பிள்ளையார் கோயிலின் முன் மண்டபத்தில் எதிர்வரும் 28.05.2022 சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கு கைலாசபிள்ளையார் அடியார்கள், திருவிழா உபயகாரர்கள் மற்றும் கோயில் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறியத் தருகின்றோம்

செயலாளர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
05.04.1956

உதிர்வு
30.05.2021



## அமரர் கந்தையா குலேந்திரன்

ஆண்டொன்று போனதையா ஆறவில்லை எம் துயரம்
ஆண்டவனின் நியதி இது அழித்தெழுத முடியாது.
அன்பை அரவணைப்பை ஆழ்ந்த பல அனுபவத்தை
இமைப் பொழுதில் கனவாக்கி நெடும் பயணம் சென்றீரோ!!!

எதிர்பாராத நோய் வந்து நடை இழந்து சுகமிழந்து
மனதளவில் நொந்து நீரும் மண்ணுலகம் வெறுத்தீரோ!!!
பிள்ளையாரே இனி முடியாது என்னை எடு
என்று இறுதி வார்த்தையுடன்
அரசடியான் பாதம் சரணடைந்தீரோ ஐயா!!!

உம் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

# ஓராண்டு நினைவலைகள்



மண்ணில்
01-07-1940

விண்ணில்
30.05.2021

## அமரர் புதியார் நமசிவாயம்

(உரிமையாளர் – ஈஸ்டன் மோட்டோஸ் – மட்டக்களப்பு)

திதி : வைகாசி அபரபக்க பஞ்சமி

ஆண்டொன்று சென்றாலும் ஆறிடுமோ எம் மனது
ஆறாத துயரோடு வாழ்கிறோம் அப்பாவே!
நேற்றுப் போல் எல்லாம் எம் நெஞ்சோடு நினைவிருக்க
காற்றுப் போல் வந்து காலன் கவர்ந்தது ஏன்?
தோற்றது எம் வாழ்வு தொலைந்தது எம் இன்பம்
காத்து காத்து ஏமாறுகிறோம் கண்ணீரையே காண்கிறோம்

நிலாவில்
அல்வாய் வடமத்தி, அல்வாய்
077 372 7796

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(NE 18248) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திடீரென...

திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை அச்சுவேலியில் நடந்துள்ளது.



கடைக்குச் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளை வழமைபோன்று வீட்டு வளாகத்தில் நிறுத்திவிட்டு, உரிமையாளர் வீட்டுக்குள் சென்ற நிலையில், மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்துள்ளது.

மோட்டார் சைக்கிள் தீப்பற்றிக் கொண்டமைக்கான காரணம் தெரியவரவில்லை. மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட தீயால் வீட்டின் ஜன்னலின் ஒரு பகுதி எரிந்துள்ளது. (அ-எ-23)

## கோதுமை மா....

மா விலையேற்றத்தால் பேக்கரிப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. 450 கிராம் (ஒரு இறாத்தல்) பாண் ஒன்றின் ஆகக் கூடிய சில்லறை விலை 170 ரூபா என்றும், பணிஸ் வகைகளின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்றும் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் நேற்று அறிவித்தது. யாழ்ப்பாணத்தில் இதுவரை 450 ஒரு இறாத்தல் பாண் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள நிலையில், இன்று முதல் 20 ரூபாவால் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒரு இறாத்தல் பாணின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும், ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் நேற்று அறிவித்தது. (எ-இ)

## 'சதிகார...

கலைக்க பொலிஸார் உயர் அழுத்தம் மிகுந்த கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர். அதனால் அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது.

'கோத்தா - ரணில் சதிகார அரசாங்கத்தை விரட்டுவோம், முறைமையை மாற்றுவோம்' எனும் தொனிப்பொருளிலான பல்கலைக்கழக மாணவர்களின் பேரணி அழகியற்கலை பல்கலைக்கழகத்துக்கு அருகில் நேற்று மாலை ஆரம்பமானது.

ஆர்ப்பாட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் பொலிஸார் அங்கு சென்று ஆர்ப்பாட்டத்தை நிறுத்த வேண்டும் என்று அறிவித்தனர். ஆயினும் ஆர்ப்பாட்டப் பேரணி திட்டமிட்டவாறு கொழும்பு நகர மண்டபம், மருதானை, தொழில்நுட்ப சந்தியைக் கடந்து கொழும்பு, கோட்டையைச் சென்றடைந்தது.

அதேவேளை, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் கொழும்பு கோட்டை பகுதியிலுள்ள எந்தவொரு அரச நிறுவனங்களுக்குள்ளும் 5 வீதிகளுக்குள்ளும் பிரவேசிக்க முடியாது என்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

கொழும்பு கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கோரிக்கைக்கு அமைய, கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்தார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய உத்தியோகபூர்வ இல்லங்களுக்குள் பிரவேசிப்பது, பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அதிகாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்துவது, பொருள்களுக்குச் சேதம் விளைவிப்பது, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டது.

கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகக் கூடியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களிடம் பொலிஸார் நீதிமன்ற உத்தரவைக் கூற முற்பட்டபோது, அங்கு இரு தரப்பினருக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டதால், பொலிஸார் அங்கிருந்து ஓடிச் சென்றனர்.

அதன்பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் உலக வர்த்தக மைய வளாகத்தை அடைந்தனர். அங்கு பொலிஸாரால் உயர் அழுத்தம் மிகுந்த கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் பல சந்தர்ப்பங்களில் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டனர். அந்தப் பகுதியில் தமது வேலைகளில் ஈடுபட்டிருந்த சாதாரண மக்களும் பொலிஸாரின் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகத்தால் பாதிக்கப்பட்டனர்.

ஆயினும் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததால் அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை காணப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தால் நேற்று மாலை கொழும்பில் பெரும் வாகன நெரிசலும் ஏற்பட்டது. (அ-எ-இ)

## பதவிப்...

தால் இப்போது ஏற்பட்டுள்ள துன்பத்தை அனுபவித்திருக்க வேண்டியதில்லை என்று மஹிந்த ராஜபக்சவின் மூத்த சகோதரரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாட்டில் நடந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போது உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- அரசியல் செய்தால் விட்டுக்கொடுப்பது ஒரு பழக்கமாக இருக்கவேண்டும். பதவிகளுக்குப் பேராசை கொண்டால் இது போன்ற துன்பங்களை அனுபவிக்க நேரிடும். சரியான நேரத்தில் பதவிகளில் இருந்து வெளியேறுவது முக்கியமானது. மஹிந்த ராஜபக்ச சுமார் 50 ஆண்டுகளாக நாட்டுக்காகப் பெரும் சேவையாற்றியுள்ளார். ராஜபக்சக்கள் 90 ஆண்டுகள் நாட்டுக்காகச் சேவையாற்றியுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க அதிர்ஷ்டசாலி. 2015ஆம் ஆண்டு குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்களுடன் பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, இன்று ஒரு ஆசனத்தில் பிரதமராகியுள்ளார்.

போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலுக்குப் பின்னரே அனைத்து வன்முறைகளும் நடந்தன. தவறான அறிவுறுத்தல்களே அதற்குக் காரணம். தாக்குதல் நடத்தியவர்களை ஏன் பொலிஸார் தடுக்கவில்லை என்பதும், ஏன் அவ்வாறான உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்பதும் மர்மமாக உள்ளது. இந்தப் போராட்டத்தின் பின்னணியில் ஜே.வி.பியும், முன்னிலை சோஷலிஸக் கட்சியும் இருக்கின்றன. இது இரகசியம் அல்ல. பொருளாதார வீழ்ச்சிக்கு அரசியல்வாதிகள் மட்டுமல்ல. அதிகாரிகளும் காரணம் - என்றார். (அ-எ-இ)

## இலங்கையில்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- உலகளவில் இந்த வருடம் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உலக வங்கி அவசர நிதியாக 30 பில்லியன் டொலரை ஒதுக்கியுள்ளது. பெரியதொரு சவாலை எதிர்கொள்ளத் தயாராகிவருகின்றோம் என அமெரிக்க நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் உணவு இருக்காது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே, உடனடியாக உற்பத்தி நடவடிக்கையை ஆரம்பிக்கவேண்டும். அதனால்தான் புதிய வரவு - செலவுத் திட்டமொன்றை வெகுவிரைவில் முன்வைக்க எதிர்பார்க்கின்றேன்.

நாட்டில் உள்ள அரசு வெற்றுக்காணிகளில் பயிரிடுவோம். மாவட்ட மட்டத்தில் குழுக்கள் அமைத்து, இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-எ-44)

## கொடூரமாகத்...

தம்பதியரைக் கொடூரமாகத் தாக்கி கொள்ளையிட முயன்றோர், அயலவர்கள் கூடியதால் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு நடந்துள்ளது.

குறித்த வீட்டுக்குள் புகுந்த மூவர் வீட்டில் இருந்த கணவனையும், மனைவியையும் கத்தி மற்றும் உலக்கையால் தாக்கியுள்ளனர். கணவனின் கையை வெட்டிக் காயப்படுத்தியதுடன், மனைவியை உலக்கையால் தாக்கிக் கொள்ளையிட முயன்றுள்ளனர்.

வீட்டில் இருந்த சிறுவர்கள் பெருங்குரலில் அழுததால் சந்தேகமடைந்த அயலவர்கள், ஒன்றுகூடியதையடுத்து கொள்ளையர்கள் மூவரும் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

வீட்டுக்குள் குருதி வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்த கணவனையும், கொள்ளையர்களின் தாக்குதலால் பாதிப்படைந்த மனைவியையும் அயலவர்கள் மீட்டு கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

தம்பதியர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருப்பதால், வீட்டில் நகைகள், பணம் கொள்ளையிடப்பட்டதா என்பதைச் சரியாகக் கூறமுடியவில்லை என்று தெரிவித்த பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தனர். (அ-எ-113)

## புலிகள்...

இணைந்து உயிரிழந்த இளைஞர்களையும் நினைவுகூர வேண்டும் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற டிலான் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- போரில் உயிரிழந்த படையினரை நினைவுகூரும் நாள் இன்று (நேற்று). அவர்களை நினைவு கூர்ந்து அவர்களை கௌரவப்படுத்தும் அதே வேளை- தவறான வழியிலேனும் பயணித்து புலிகள் அமைப்பில் இணைந்த தமிழ் இளைஞர்களையும் நாம் நினைவுகூர வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இந்தப் பிரச்சினை தீர்ப்போவதில்லை.

இடைக்கால அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்று நான் ஆரம்பம் முதலே வலியுறுத்தினேன். ஆனால், புதிய பிரதமரை தெரிவுசெய்ய இந்நாட்டில் வன்முறை இடம்பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. மஹிந்த ராஜபக்ச, மே மாதம் 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு பதவி விலகியிருந்தால்கூட இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. அதனால் மே 9 சம்பவத்துக்கு அவரும் பொறுப்புக்கூற வேண்டும் - என்றார். (அ-எ-44)

## வடக்கு...

பிரச்சினை உள்ளவர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசியின் நான்காவது டோஸ் (பைசர்) ஏற்றப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்தவாரம் முதல் தடுப்பூசி ஏற்றல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும், ஏற்கனவே தடுப்பூசிகளை மூன்று தடவைகள் ஏற்றி, மூன்று மாதங்கள் நிறைவடைந்தவர்கள் மட்டுமே தடுப்பூசியை ஏற்றிக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தந்தப் பிரதேசங்களுக்குரிய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் தடுப்பூசி ஏற்றப்படும் என்றும், தடுப்பூசி அட்டையைச் சமர்ப்பித்து நான்காவது தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் பொது மருத்துவமனைகளிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

20 வயதுக்கு மேற்பட்ட பின்வரும் நோய்நிலைமை உள்ளவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நோய் எதிர்ப்புக் குறைபாட்டு நிலைமை நோயாலோ அல்லது நோய்க்குரிய சிகிச்சையாலோ ஏற்பட்டவர்கள், நாள்பட்ட சிறுநீரக தொகுதியுடன் தொடர்புடைய நோய் நிலைமைகள், திண்ம அங்கங்கள் (சிறுநீரகம், ஈரல், சுவாசப்பை போன்றவை) மற்றும் என்புமச்சை அல்லது ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சைக்குட்பட்டவர்கள், புற்றுநோய் உடையவர்களில் அதற்கான சிகிச்சை பெறுபவர்கள் மற்றும் அதற்குரிய சிகிச்சையை நிறைவு செய்தவர்கள், மண்ணீரல் இல்லாதவர்கள் மற்றும் மண்ணீரல் தொழிற்பாட்டு பிரச்சினை உடையவர்கள், வேறு ஏதாவது நோய் நிலைமைகளால் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த நிலையில் உள்ளவர்கள் என சிகிச்சை அளிக்கும் பொது மருத்துவ நிபுணரால் தடுப்பூசிக்காக பரிந்துரைக்கப்படுவர்கள் போன்றோருக்கே தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (அ-எ-இ)

## உர மூடை....

பிரச்சினைக்கு தீர்வு காண பிரதமரால் நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை, இந்தியக் கடன் அடிப்படையில் 65 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை இந்தமாத இறுதிக்குள் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்தக் குழு குறிப்பிட்டுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி பகுதிகளிலும் டெங்கு வாரம் கடைப்பிடிப்பு

சாவகச்சேரி, மே 20

நாடளாவிய ரீதியில் டெங்கு கட்டுப்பாட்டு வார செயற்பாடுகள் நேற்று அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரி பணிய கங்களாலும் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கமைய நேற்று சாவகச்சேரி நகர பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட் பட்ட மீசாலை மேற்கு பிரிவில் உள்ள வாழ்விடங்கள், காணிகள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இன்று எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் வடக்குப் பிரிவிலும் , நாளை மந்துவில் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக் குட்பட்ட மீசாலை வடக்குப் பிரிவிலும் நாளைமறுதினம் அனைத்துப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளிலும் உள்ள பாடசாலைகள், சந்தைகள், பொது இடங்கள் போன்றவற்றிலும் 22 ஆம் திகதி வழிபாட்டுத் தலங்கள், கட்டட நிர்மாணத் தளங்கள் போன்றவற்றிலும் டெங்குப் பரிசோதனைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி வரை டெங்குக் கட் டுப்பாட்டு வாரம் கடைப்பிடிக்கப்ப டுவதால் பொது மக்கள் தமது வாழ்விடங்கள், வெற்றுக் காணி கள், வழிபாட்டுத் தலங்கள், கட்டட நிர்மாணத் தளங் கள், சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழலை அகற்றி டெங்குத் தாக்கத் திலிருந்து பாதுகாக்கும் தடுப்பு நட வடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள் ளனர். (ஓ-14,9)

## மோ.சைக்கிள் திருட்டு; இளைஞர் கைது

மோட்டார் சைக்கிள் திருட்டு தொடர்பில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த மார்ச் மாதம் பஜார் வீதியில் நிறுத்திவைக் கப்பட்டிருந்த மோட் டார் சைக்கிள் திருடப் பட்டது என்று வவுனி யா பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்க மைய விசாரணை களை முன்னெடுத்த குற்றத்தடுப்புப் பிரி வினர் நொச்சியாகம பகுதியில் 39 வய தான இளைஞரைக் கைது செய்ததுடன் அவர் மறைத்து வைத்திருந்த மோட் டார் சைக்கிளையும் மீட்டனர். (ஓ-14,18)

## Vacancie

Cashier, Supervisor, Store Keeper, Receptionist, Accounts, Admin, Cash Collector, Marketing, Social Media Promotor, பொதிசெய்தல், வயறிங், விற்பனை, கிளாக்

Interview: 21/05.2022 1.30 to 4.00 pm

Interview Place: DEWMAS 51, Amman Road, Nallur.

077 7733 368, 074 138 3368

## வீடு வாடகைக்கு

சுன்னாகம் Dr.சுப்பிரமணியம் வீதி. (றோமன் கத்தோலிக்க பாடசாலை அருகாமையில்) அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.

நிறுவனங்களும் விரும்பத்தக்கது

(cs 44726) (2.6)

தொடர்பு: 076 313 6371

Viber: 076 323 2533

## தென்னம் தோட்டக்காணி தேவை

- முகமாலை. எழுதுமட்டுவாழ். பளை. இயக்கச்சி. புதுக்காடு.மருதன்கேணி அல்லது ஏனைய பொருத்தமான ஒரு பிரதேசத்தில் தென்னம் தோட்டம் அமைப்பதற்கு 20 ஏக்கர் காணி உடனடி தேவை.
- கால்நடை பண்ணை அமைப்பதற்கு 5 தொடக்கம் 10 பரப்புக் காணி நீண்ட கால குத்தகை அடிப்படையில் தேவை.

தொடர்பு இலக்கம்: 077 907 6843

முக்கிய குறிப்பு: தயவுசெய்து காணி உரிமையாளர்கள் தொடர்புகொள்ளவும் தரகர் தேவையில்லை

## Dr. SAM FOUNDATION

Re.No:GA 00204710

No:78, Kumarapuram, Paranthan, Kilinochchi.

### சேவையிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பான அறிவித்தல்

**செல்வி பிரம்மியா சண்முகராஜா** (NIC 896093150V) Dr.Sam நிறுவனத்தில் பதிவாளராக கடமையாற்றிய போதும் இவர் எமது நிறுவனத்திலிருந்து 30.01.2022 தொடக்கம் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பதுடன். எமது நிறுவனத்திற்கும் **செல்வி பிரம்மியா சண்முகராஜாவுக்கும்** எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதனை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் எமது நிறுவனம் தொடர்பாக அவரிடம் எவ்வித தொடர்பு களையும் பேணவேண்டாம் என்பதுடன். இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு Dr.Sam நிறுவனம் எவ்விதத்திலும் பொறுப் பில்லை என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

**நிர்வாகம்**

Dr. SAM FOUNDATION

(CS 18137) 1-6

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 22 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்.
- A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்
- மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம் :**

**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

தரகர் தேவையில்லை

**தொடர்புகளுக்கு : ஜெயம்**

077 814 7389, 077 241 7589

## 2022 A/L

**பௌதீகவியல் சடப்பொருளியல்**

ஆரம்பம்:21.05.2022 சனி. 10.00 மணி வெங்கடேசர் வீதி, யாழ்ப்பாணம்.

**Science Hall அருகில்**


## வீடு வாடகைக்கு தேவை

மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு யாழ்ப் பாணத்திலோ அல்லது யாழ்ப்பாணத்தை சுற்றி உள்ள பகுதிகளிலோ நல்ல சூழலில் வீடு வாடகைக்குத் தேவை. (CS 44525) (3/6)

077 821 2391

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 33 பரப்புக் காணிவிற்பனைக்கு.




நிலப்பரப்பு

- ✓இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓கைதடி சித்த போதனா வைத்தியசாலை. யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கிழக்கு எல்லைகள்
- ✓சமுர்த்தி வங்கி வடக்கு எல்லை.
- ✓கைதடி சந்தி **200 M** தூரம்
- ✓வட மாகாண சபை அலுவலகம் 250 மீற்றர் தூரம்.
- ✓மூன்று வழி பாதையுடன்
  - 01- A-09 வீதி 100 மீற்றர் (16 அடி பாதையுடன்)
  - 02- கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடி பாதையுடன்)
  - 03- சமுர்த்தி வங்கி அருகாமை **100 M** தூரம் (16 அடி பாதையுடன்)
- ✓சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- ✓செம்மண் காணி.
- ✓பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு: 077 6234 204 077 2880 152 076 6583 621**

(CS 877) 1/6

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.04.2022 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**இராசரத்தினம் பஞ்சலிங்கம்**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (21.05.2022) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் (23.05.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்விற்கு தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜபாதை வீதி,
கோப்பாய்.

குடும்பத்தினர்

(CS 44755) (3/6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.